Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 27 (31.03.2003) திங்கட்கிழமை இதழ் :179


ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகள், பல்வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக்கும் வருகை தாருங்கள்

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (சி-652)
T.P.No. 222 2063

## கூட்டமைப்பில் இணைந்ததால் இந்தியாவுடனான உறவு பாதிப்பு!

### கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கூறுகிறார்

புலிகளின் குரலாக தாம் விமர்சிக்கப்படுவதைத் தன்னால் மகிழ்ச்சிக்குரியதாக ஏற்க முடியவில்லை என்றும், இந்திய அரசின் அழுத்தத்தின்படி தான் நடந்துகொள்வதாகக் கூறப்படுவது தவறானதென்றும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டதால் இந்தியாவுடனான கூட்டணியின் உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறிவருவது இந்தியாவிற்கு மகிழ்ச்சியைத் தரவில்லை.

புலிகளின் கடந்தகால நடவடிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு – புலிகள் பேச்சு: வியத்தகு முன்னேற்றம்!

### பிரித்தானிய அமைச்சர் பாராட்டு


இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள், வியத்தகு முறையில் முன்னேற்றம் கண்டு வருவதாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் விவகார அமைச்சர் மைக் ஓ பிறைட் தெரிவித்தார்.

நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் இவரைச் சந்தித்துப் பேசியபோதே இக்கருத்தை அவர் வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, ஜப்பானில் நடந்த சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரித்தானிய அமைச்சர் மைக் ஓ பிறைட்டுக்கு விளக்கமளித்திருந்தார்.

அமெரிக்க விஜயத்தினை முடித்துக்கொண்ட அமைச்சர் பீரிஸ் பிரித்தானியாவுக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தலைவரின் கரத்தைப் பலப்படுத்தி பேச்சுக்களில் வெற்றி பெறுவோம்!





### மூத்த தளபதி கேணல் கருணா தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**தமிழீழ தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தியவாறு இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் வெற்றிபெறுவோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா, நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற தமிழீழ தேசிய மகளிர் இறுதிநாள் மாநாட்டில் பங்குபற்றி உரையாற்றியபோது தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாங்கள் இன்று எந்தச்சவாலையும் எதிர்கொள்ளக் கூடிய பலமான நிலையில் உள்ளோம். எம்மிடம் நல்ல படைப்பலம் உள்ளது. எனவே, அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இந்த விடுதலைப் போராட்டம் தலைவரால் தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்தநிலையில் நாங்கள் பல அனுபவங்களைப் பெற்றுள்ளோம். பல சாதனைகள் படைத்துள்ளோம். பல துன்பங்களையும் வேதனைகளையும் கடந்து உறுதியான, வலுவான நிலையை இந்த விடுதலைப் போராட்டம் அடைந்துள்ளது.

இன்றைய சமாதான காலத்தில் சிறிலங்கா அரசு தனது படைப்பலத்தைக் கட்டியெழுப்பி வருகிறது. வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்து வருகின்றது. இந்தக் காலகட்டத்தில்தான் இந்த மகளிர் மாநாடு இடம்பெற்றுள்ளது. இது ஒரு முக்கியமான மாநாடு. ஏனென்றால், இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்துக்கொள்ளக் கூடிய காலம் இது.

தமிழீழத்தில் வாழும் அனைத்து மக்களும் ஒன்றாக நிற்பதன் மூலமாகத்தான் நாங்கள் இந்தச் சமாதான

(10 ஆம் பக்கம் பார்க்க)

**விண்ணாணம் விநாசியர்**



சங்கரியாருக்கு எதையும்விட உந்தக் கவலைதான் இப்ப பெருத்துப் போச்சு...!

## ட்ரோலரை மூழ்கடித்தோரை உடனடியாக கண்டுபிடியுங்கள்

### அரச, புலிகள் தரப்பினரிடம் கோரிக்கை

முல்லைத்தீவுக் கடலில் சீன மீன்பிடி ட்ரோலர் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட மூன்றாவது சக்தியைக் கண்டுபிடிக்குமாறு, அரசாங்கத்திடமும் விடுதலைப்புலிகளிடமும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் புலிகளோ அல்லது கடற்படையோ தொடர்புபட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. எனவே; இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆயுதக்குழுவைக் கண்டறிந்து கைதுசெய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் முத்தமிழ் விழா 5 நாட்கள் நடைபெறுகின்றது

### கலை பண்பாட்டுக்கழக ஏற்பாட்டில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள முத்தமிழ் கலையரங்க நிகழ்வுகள் திருகோணமலையில் நடைபெறவுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் எட்டாம் திகதி முதல் பன்னிரெண்டாம் திகதி வரை இந்தக் கலை விழா நடைபெறும்.

விழாவில் இசை, நடன, நாடக நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளதுடன், கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலைவிழாவில் தமிழகத்திலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டு எல்லைகளை வகுப்பது இன்றுள்ள முக்கியமான பிரச்சினை

### கண்காணிப்புக்குழு பேச்சாளர் ரொக்கில்சன்

(கொழும்பு)

அரச படையினருக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான கட்டுப்பாட்டு எல்லைகளை வகுப்பதே இன்றுள்ள முக்கியமான பிரச்சினை என்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொக்கில்சன் தெரிவித்தார்.

கடந்த வருடம் தமக்கு உடன்படிக்கை மீறல் தொடர்பான 2109 குற்றச்சாட்டுக்கள் கிடைத்ததாகவும், இவற்றில் 491 மட்டுமே யுத்த நிறுத்த மீறல்கள் என இனங்காணப்பட்டதாகவும் தெரிவித்த அவர்,

இவ்வருடம் 189 புகார்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், இவற்றில் 67 புகார்கள் மட்டுமே யுத்த நிறுத்தக் மீறல்கள் என இனங்காணப்பட்டிருக்கிறது என்றும் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் அச்சுறுத்தல் கொழும்பில் இல்லை!

கொழும்பு நகருக்குள் புலிகள் ஊடுருவியிருப்பதாக பத்திரிகைகளில் வெளியான தகவல் குறித்து, தமது புலனாய்வுச் சேவைகள் எதற்கும் தகவல்கள் கிடைக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு வெளி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விசா வழங்க பாலியல் துஷ்பிரயோகம்; பிரிட்டிஷ் தூதரக அதிகாரி சிக்கினார்!

பிரித்தானியத் தூதரகத்தில் விசா வழங்குவதற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகளில் ஒருவர், பெண்களைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகவும், பணம் பெற்று விசா வழங்கியதாகவும் குற்றச்சாட்டுக்குள்ளாகி - பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். மேலும் பல அதிகாரிகள் விசாரணைகளுக்குள்ளாகியுள்ளனர்.

பிரித்தானிய விசாவை வழங்குவதற்கு 5 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டதாகவும், பெண்களைப் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாகவும் தெரியவந்ததை அடுத்து அதிகாரி ஒருவர் இடைநிறுத்தப்பட்டார். இத்தகவலை தூதரகப் பேச்சாளர் கொலின் பிக்ஸ் உறுதி செய்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரி 10 வருடங்களாக தூதரகத்தில் பணியாற்றியதாகவும், இவர் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தினாலேயே நியமிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

பாலியல் ரீதியாகத் திருப்திப்படுத்தினால், பிரித்தானிய விசா வழங்குவதாகக்கூறி, நாவலவில் உள்ள தனது வீட்டுக்கு இவர் பெண்களை அழைத்துள்ளார். அத்துடன், தூதரகத்துக்குச் செல்லும் பொதுமக்களிடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SCANDIA AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

(சி-626) 01-505632, 074-612656, 01-390128

# சமாதான கேடயத்தை றோயல் அணி வென்றது!

பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற சமாதானக் கேடயத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் - கொழும்பு றோயல் கல்லூரி அணி, யாழ்.பரியோவான் அணியை வென்று, கேடயத்தை சுவீகரித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை - கொழும்பு றோயல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் - முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் கல்லூரி அணி, 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 277 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டி.சிறிவர்த்தன 108 ஓட்டங்களையும், நவீன் டயஸ் 68 ஓட்டங்களையும் பெற்றனர். தொடர்ந்து களமிறங்கிய பரியோவான் அணியினர், 41 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் அகிலன் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களைப் பெற்றார். இப்போட்டியில் - கொழும்பு றோயல் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (சு)


## மலிவு விற்பனை

**20% முதல் 50% வரை**

**புதுக்கணக்குப் போடவிருப்பதால்**

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-706)

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



## எக்ஸ்போ ஏவியேஷன்

இல. IE, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. - 021-2223891, 071-348888, 071-349999, 0777-730666

### ஏப்ரல் முதலாம் திகதி முதல்

*காலைநேர விமான சேவை*

| கிழமை | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
|---|---|---|---|---|
| திங்கள், செவ்வாய், புதன் | 06.30 | 07.30 | 08.15 | 09.15 |
| வெள்ளி | 10.45 | 11.45 | 12.30 | 13.30 |
| சனி | 08.15 | 09.15 | 10.00 | 11.00 |

*மாலைநேர விமான சேவை*

| கிழமை | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
|---|---|---|---|---|
| செவ்வாய் | 12.45 | 13.45 | 14.30 | 15.30 |
| வெள்ளி, சனி | 16.00 | 17.00 | 17.45 | 18.45 |
| ஞாயிறு | 14.00 | 15.00 | 15.45 | 16.45 |

குறிப்பு:- புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தமது மீள் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

☆ குளிரூட்டப்பட்ட இலவச போக்குவரத்து

யாழ். - பலாலி - யாழ்.
கொட்டாஞ்சேனை - இரத்மலானை - கொட்டாஞ்சேனை

☆ வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும், உள்நாட்டுப் பிரஜைகளுக்கும் ஒரே வகையான கட்டணமே அறவிடப்படுகிறது.

ஒருவழி - 2425/- இருவழி - 4550/- (சி-720)



## ஆரோக்கியமான வாழ்வுக்கென வடிவமைக்கப்பட்டது




**புத்திசாலித்தனமானது**
- உள்வரும் வெளிச்செல்லும் பகுதிகள் தட்டையாக இருப்பதால் கசியாமல் இறுக்கமாக மூடப்பட்டுள்ளது.
- இலகுவாக பொருத்தக்கூடியது.
- குறிப்பிட்ட தேவைகளுக்கென பல்வேறு அளவுகளிலும் வடிவமைப்புக்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**பலம்வாய்ந்தது**
- 10 வருட அன்டன் உத்தரவாதம்.
- கெட்டியாக உருக்கி வார்க்கப்பட்ட பிளாஸ்டிக் என்பதால் நிலைத்து நிற்கக்கூடியது.
- எல்லா காலநிலைக்கும் ஏற்ற உறுதியான வெளிப்புற மேற்பரப்பு

**ஆரோக்கியமானது**
- நுண்கிருமி உற்பத்திக்கு இடமில்லாததால் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான தூய குடிநீர்.
- அகன்ற வாய் காரணமாக உட்பக்கம் சுத்தம் செய்ய வசதியானது.
- புரியுள்ள மூடியால் மூடப்பட்டுள்ளதால் பூச்சிகள், தூசுகள் உட்புக முடியாது




- செங்குத்தானது
- கிடக்கையான தாங்கி
- மடிப்புத் தாங்கிகள்
- பல்-அடுக்கு தாங்கி
- உட்காப்பிட்ட தாங்கி

ஆகியனவும் கிடைக்கும்

உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்
ANTON

**சென்ட் அன்டனீஸ் இன்டஸ்ரீஸ் குறூப் (பிறைவேட்) லிமிட்**

தலைமை அலுவலகம், வாடிக்கையாளர் சேவை நிலையம்,
752/1, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 9.
சந்தைப்படுத்தும் பிரிவு: 516, முதலாம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழு - 10.
ஹொட்லைன்: 422075, 422093. தொ.பே.: 320622-3-4. தொ.நகல்: 431496.
E-mail: antonmkt@slt.lk
காட்சி அறை: 320, ஆர்.ஏ.டீ. மெல் மாவத்தை, கொழும்பு 3. தொ.பே.: 370747.
Website: www.anton.lk

(சி-717)


## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

(தாவடி)

இணுவில் பொதுநூலக சன சமூக நிலைய ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நூலக முன்றிலில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக துணைவேந்தர். எஸ்.மோகனதாஸ் கலந்துகொள்கிறார்.

ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டி, கணினிப் பரீட்சை, மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப்போட்டி, காற்பந்து, துடுப்பாட்டம் போன்றவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

### சுழிபுரம் பகுதியில் படையினர் பனை தறிப்பு

சுழிபுரம் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்திலுள்ள பனை மரங்களை, படையினர் தமது தேவைகளுக்காக தறித்து எடுத்துச்செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. படையினரின் இச்செயற்பாடுகள் தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன. (118)

### காணியற்ற 65 குடும்பங்களுக்கு அரச காணிகள்

(சரசாலை)

காரைநகர், சாம்பலோடை கடற்கரைப் பகுதியிலுள்ள அரச காணிகள் - வறுமைக் கோட்டின் கீழுள்ள காணியற்ற 65 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

சாம்பலோடை கடற்கரைப் பகுதிக்கு அண்மையிலுள்ள காணிப் பகுதிகளே இப்பகுதியில் கடற்தொழில் செய்து வரும் குடும்பங்களுக்கு ஒன்றரைப் பரப்பு என்ற வீதத்தில் வழங்கப்படவுள்ளன. (34)


**ராஜா** யாழ்ப்பாணம்.

விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த



**பகவதி**

10.30, 2.30, 6.30, 9.30 (சி-628)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த

**மாயி**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

**HOLLOW MAN** (சி-627)

# ஜப்பானும், நோர்வேயும் தமது நலன்களுக்காக இலங்கை விவகாரத்தில் தலையிடுகின்றன!

## கதிர்காமர் லண்டனில் குற்றச்சாட்டு

(லண்டன்)

**உலக அரங்கில் தன்னை முக்கிய பங்காளராக நிலைநிறுத்திக் கொள்வதற்காக நோர்வேயும், ஐ.நா.பாதுகாப்புச்சபையில் உறுப்புரிமைப் பெற்றுக் கொள்வதற்கான பரிசோதனைக் களமாகப் பயன்படுத்துவதற்கு ஜப்பானும் - இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்துள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் லண்டன் கிளை ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றியபோதே லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

உலக அரங்கில் தன்னை முக்கிய பங்காளராக நிலைநாட்டிக் கொள்ளும் நோக்கத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஆர்வம் காட்டும் நோர்வேக்கு - இலங்கையின் மீது எந்தப் பற்றும் கிடையாது.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அனுசரணையாளராக வந்த நோர்வே, துரதிர்ஷ்டவசமாக விடுதலைப் புலிகளுக்கு அதிக சலுகை காட்டும்வகையில் செயற்படுகிறது.

இன்றைய சமாதானச் சூழலில் பொதுமக்களின் மனநிலை மாறியுள்ளது. போரினால் இறந்தவர்களின் உடலையோ, சனநெருக்கடிமிக்க இடங்களில் குண்டு வெடிப்புக்களின் தாக்கங்களையோ இப்போது மக்கள் அனுபவிக்கவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளபோதும் - இது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப்பெற வழிவகுக்கும் எனத் தோன்றவில்லை. சமாதான முயற்சிகளின் மூலம் புலிகள் - அரசாங்கத்தையும், உதவி வழங்கும் நாடுகளையும் நன்கு பயன்படுத்திக்கொள்ளவும், எவ்வித எதிர்ப்புமின்றி சுதந்திரமாக நடமாடவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நோர்வேயின் நிலை இப்படியிருக்க, ஜப்பானும் - இலங்கை விவகாரத்தில் அதிகமாகத் தலையிடத் தொடங்கியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச்சபையில் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் - தமது பரிசோதனைகளை நடத்திக்கொள்ளும் சிறிய ஆய்வுகூடமாக இலங்கையைப் பயன்படுத்திக் கொள்ளவுமே ஜப்பான்- இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிடுகின்றது.

இலங்கை அரசாங்கம் இப்போது நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. ஜப்பானின் தலையீட்டை எதிர்த்தால், நிதியுதவிகளை இழக்கநேரிடும். எனவே இந்த விடயத்தில் இந்தியாவின் தலையீடு அவசியம்.

இலங்கை அரசியலில் ஜே.வி.பி. முக்கிய பங்காற்றும் சக்தியாக வளர்ந்துள்ளது. இவர்கள் இளைஞர்களைக் குறிவைத்துச் செயற்படுவது மற்றைய கட்சிகளுக்கு முன்னுதாரணமாக அமையவேண்டும் என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.



## பட்டாசு தொழிற்சாலை வெடிவிபத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

பாததும்பறப் பகுதியில் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

பட்டாசுகளைத் தயாரிப்பதற்கான வெடிமருந்தை அரைத்துக் கொண்டிருந்தபோதே இந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில், தொழிற்சாலையின் உரிமையாளர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் தொழிற்சாலையைச் சுற்றியிருந்த 50 வீடுகள் சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது.

## சட்டக்கல்லூரி விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கை சட்டக்கல்லூரிக்கு 2004 ஆம் கல்வி ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத் திகதி ஏப்ரல் 30 ஆம் திகதி என்றும், நுழைவுப் பரீட்சை செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என்றும் சட்டக்கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

# தமிழ்மொழியிலேயே வழக்குகளை பொலிஸார் தாக்கல் செய்யவேண்டும்!

## பொறுப்பதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களே வசிப்பதால், நீதிமன்றத்தில் வழக்குகள் தமிழ் மொழியிலேயே தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும், ஆவணங்கள் தமிழில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் - சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு பிரதான பொலிஸ் நிலையம், வாழைச்சேனை, கல்குடா, ஏறாவூர், காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு நீதிமன்றப் பதிவாளரின் பணிப்புரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

முற்றுமுழுதாகத் தமிழ்பேசும் மக்கள் வசிக்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தில், சிங்களமொழியில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனால், தமிழ் மொழியிலேயே வழக்குகளைத் தாக்கல்செய்ய வேண்டும்.

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 4 ஆம் அத்தியாயம் உறுப்புரை 24 (1) இன் பிரகாரம் " வட-கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றங்களில் மொழி - தமிழாக இருக்கவேண்டும் என்பதுடன், அவற்றின் பதிவேடுகளும் தமிழ் மொழியில் இருக்கவேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளது.

எனவே, இனிவரும் காலங்களில் வழக்குகளைத் தாக்கல் செய்யும் போதும், அறிக்கைகள் சமர்ப்பிக்கும் போதும் தமிழ்மொழி மூலமே செய்யப்படவேண்டும். சிங்களமொழியில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பும் வழங்கப்படவேண்டும் என்றும் நீதிமன்றப் பதிவாளர் - மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

# ஓய்வுபெறும் வெஸ்பேர்க்கிற்கு கொழும்பில் நடந்த பிரியாவிடை

## அரசியல்வாதிகள் பலரும் பாராட்டு



நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இலங்கைத் தூதுவர் பதவியிலிருந்து விலகிச் செல்வதையிட்டு, நடத்தப்பட்ட பிரியாவிடை நிகழ்வில் பல அரசியல்வாதிகள் - அவரைச் சந்தித்துத் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். இந்தச் சந்திப்புக் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ, அமைச்சர் கருணசேன கொடித்துவக்கு, மிலிந்த மொறகொட, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜித சேனாரத்ன, சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா, ஹகீம் ஆகியோருடன் - எதிர்க்கட்சியைச் சேர்ந்த சரத் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் பாலபத்தபெண்டி ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் ஜோன் வெஸ்பேர்க்கின் சேவைகளைப் பாராட்டிப் பலரும் பேசினர்.

நோர்வேத் தூதுவர் பதவியிலிருந்து வெஸ்பேர்க் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி விலகிச்செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பதவியுயர்வுக்கான பயிற்சிநெறி

(நவிண்டில்)

யாழ்.குடாநாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் சாதாரண தொழிலாளர்களாக பணிபுரிபவர்களை பரிசாரகர்களாக பதவியுயர்த்துவதற்கான மூன்று மாதப் பயிற்சிநெறி - பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சிநெறிகள் இன்று ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (116)

# வைகோ, நெடுமாறனை ஆதரித்து தமிழகம் எங்கும் உண்ணாவிரதம்!

பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழக அரசியற்தலைவர்களான வைகோ, பழ. நெடுமாறன் உள்ளிட்டோருக்கு ஆதரவாகவும், பொடா சட்டத்துக்குத் எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகம், ம.தி.மு.க, பா.ம.க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கான அழைப்பினை விடுத்திருந்ததோடு, இக்கட்சிகளின் தலைவர்கள் போராட்டங்களில் பங்கேற்றனர்.

தமிழகம் முழுவதும் நடாத்தப்பட்ட இந்தப் போராட்டங்களுக்குத் தமது ஆதரவைத் வெளிப்படுத்தி, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வைகோ, நெடுமாறன் உள்ளிட்ட பொடா கைதிகளும் உண்ணாவிரத்தில் ஈடுபட்டனர்.

பொடாவுக்கு எதிரான இந்தப் போராட்டத்திற்குக் காங்கிரஸ், பாரதீய ஜனதாக்கட்சி, மாக்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் ஆதரவு வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கரையிலிருந்து 20 கி.மீ. கடற்பகுதி விடுதலைப் புலிகளுக்கு சொந்தம்!

## அரசு ஏற்றிருப்பதாக சிஹல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

மன்னார், முல்லைத்தீவு, வாகரை ஆகிய பிரசேதங்களிலுள்ள கடற்கரையிலிருந்து 20 கிலோமீற்றர் தூரம் வரையான கடற்பகுதி விடுதலைப் புலிகளுக்கு உரித்தானது என்று அரசாங்கம் உத்தியோகப்பற்றற்ற முறையில் தீர்மானம் எடுத்திருப்பதாகச் சிஹல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வருமுன்பு, தங்கள் கட்டுப்பாட்டிலிருந்த கடல்வலயத்தைத் தாங்கள் பாவிப்பதற்கு எவ்வித தடையும் இருக்கக்கூடாது என்று விடுதலைப் புலிகள் நீண்டகாலமாக அரசாங்கத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்தே, அரசாங்கம் இந்த முடிவு எடுத்துள்ளதாகச் சிஹல உறுமய மேலும் தெரிவித்துள்ளது.



கரிப்பட்டமுறிப்பு அ.த.க பாடசாலைக்கு மேழிவனம் கிராமத்திலிருந்து மாணவர்களை அழைத்து வருவதற்கான மாட்டுவண்டிச்சேவையை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், மாட்டுவண்டியில் பாடசாலை செல்லும் மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# முஸ்லிம் விவசாயிகளுக்கு மட்டக்களப்பில் அனுமதி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் நேற்று முன்தினம் தொடக்கம் முஸ்லிம்கள் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில்கூடிய முஸ்லிம்களின் காணிப்பிரச்சினைகள் தொடர்பான உபகுழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த அனுமதியை விடுதலைப் புலிகள் - முஸ்லிம் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளனர்.

வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் காணிகள் முஸ்லிம்களுக்கு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழகத்தில்

# சிரேஷ்ட -கனிஷ்ட அந்தஸ்து நீக்கப்பட்டது; கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவிப்பு!

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மைக்காலங்களாக இருந்து வந்த சிரேஷ்ட, கனிஷ்ட அந்தஸ்து (SENIORITY) என்ற ஒழுங்குமுறை கலைப்பீடத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் எவரும், எவர் மீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்கமுடியாது என்பதுடன், ஒவ்வொருவரையும் மதிக்கப் பழகுவதன் மூலம் சிரேஷ்ட, கனிஷ்ட வேறுபாடின்றித் தமக்கிடையேயான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளமுடியும்.

"சிரேஷ்ட மாணவ அந்தஸ்து" என்ற விடயம் அநேகமான உயர் கல்வி நிறுவனங்களிலிருந்து வருவது வழமை. எனினும், அது துஷ்பிரயோகம் செய்யப்படும்போது எதிரான விளைவுகளைத் தோற்றுவிப்பதாகவுள்ளது.

அதன் நோக்கங்கள் விளங்கிக் கொள்ளப்படாத நிலையில் அல்லது விளங்கிக்கொள்ளப்பட்ட நிலையிலும்கூட தமது குறுகிய நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கான ஆயுதமாகவே இன்று "சிரேஷ்ட மாணவ அந்தஸ்து" (SENIORITY) பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சில சிரேஷ்ட மாணவர்களால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

சில சந்தர்ப்பங்களில் கனிஷ்ட மாணவர்களின் திறமைகள் - இதனை ஆயுதமாகப் பயன்படுத்தி மழுங்கடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான முறையற்ற வழிகளில் இது பயன்படுத்தப்படுவதனைத் தவிர்ப்பதற்காகவும், அதனால் மாணவர்கள் மத்தியில் அமைதியற்றநிலை உருவாவதனைத் தவிர்ப்பதற்காகவும், இன்று எமது சமூகம் உள்ளநிலையில் இதன் பாதிப்புக்கள் மேலதிகச் சுமையாக உருவாகக் கூடியதனாலும் "சிரேஷ்ட மாணவ அந்தஸ்து" என்ற நிலையினைச் செயற்திறன் அற்றதாக்க முன்வந்துள்ளோம்.

எனினும், பல்கலைக்கழகத்தில் அதன் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக இருந்துவரும் நடைமுறைகள் தொடர்ந்தும் மதிக்கப்படும். இந்தமுடிவு மாணவர்கள் மத்தியில் ஓர் ஆரோக்கியமான நிலையை ஏற்படுத்தும் என்பதுடன், இந்த நிலைமையைச் சரியான வழியில் ஒவ்வொரு மாணவனும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## கூட்டமைப்பு நடவடிக்கைக்குழு பல மாதமாக கூட்டப்படவில்லை

### ரெலோ முதல்வர் சிறிகாந்தா விசனம்

(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பிலுள்ள நான்கு கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய நடவடிக்கைக் குழு ஒன்பது மாதகாலமாகக் கூட்டப்படாமல் உள்ளதென ரெலோ முதல்வர் சிறிகாந்தா விசனம் தெரிவித்துள்ளார்.

நடவடிக்கைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் சம்பந்தன் இக் கூட்டத்தைக் கூட்ட வேண்டியவர். இவருக்கு, தான் நடவடிக்கைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் என்ற ஞாபகம் இருக்கின்றதோ தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்பின் நடவடிக்கைக்குழு - இறுதியாகக் கடந்த ஜுன் மாதமளவில்தான் கூட்டப்பட்டுள்ளது என்றும் மேலும் அவர் தெரிவித்தார். (லி)

### ஆலயத்தில் திருட்டு

(அராலி)

சங்கானை - கூடத்து அம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக் கிழமை திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் உட்பகுதிக்குள் புகுந்த திருடர்கள் - மூலஸ்தானத்தல் அமைந்திருந்த அம்மன் சிலையைப் பெயர்த்து, அதிலிருந்த இயந்திரத் தகட்டைக் களவாடியதுடன், உண்டியல்களிலிருந்த பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

## புதிய உப தபாலதிபர்களுக்கு இருவாரகாலப் பயிற்சி வகுப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நியமிக்கப்பட்ட உதவித்தபால் அதிபர்களுக்கான இரு வாரப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணையிலுள்ள தபால்நிலையக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி வகுப்பில் 38 உதவித்தபால் அதிபர்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர்.

யாழ். மாவட்டப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில், வட மாகாண அஞ்சல்மா அதிபர் என்.ஜெயரட்ணம், பயிற்சிகளுக்கான பணிப்பாளர் எம்.லங்காதீப ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்களைத் தொடர்ந்து நடாத்துவதற்காகக் கொழும்பிலிருந்து விரிவுரையாளர்கள் வருகை தந்துள்ளனர்.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறும் இந்தப் பயிற்சியின் முடிவில் தபால் நிலையங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவர். (ச)


**இணுவில் பொதுநூலக சனசமூக நிலையம்**

**ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்**

தலைவர் :- சொ.ஹரிகஜன்
காலம் :- 31.03.2003 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி.

பிரதம விருந்தினர் :- பேராசிரியர் S.மோகனதாஸ் (துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர் : -திருமதி சி.செல்வவிநாயகம் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)

தொடக்க உரை :- க.தேவராஜா (போசகர்) (வணிகத்துறைத் தலைவர் யாழ். பல்கலைக் கழகம்)

பரிசில் வழங்கல் :- பொதுஅறிவுப் போட்டி, கணினிப் பரீட்சை, மரதன் ஓட்டம், துவிச்சக்கரவண்டி ஓட்டம், காற் பந்து, துடுப்பாட்டம்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

இணுவில் பொதுநூலகம் இணுவில் - மானிப்பாய் வீதி இணுவில்.

*விளம்பர அனுசரணை:-*

நமது ஈழநாடு அங்கீகரிக்கப்பட்ட விளம்பர முகவர்.

**கணபதி தொலைத் தொடர்பகம்.**

24 மணிநேர தொலைத் தொடர்பு, இன்ரநெற், பக்ஸ், போட்டோ பிரதி, டயலொக் கிற்காட் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

T.P. ;- 5311, 2644

**இணுவில் - மானிப்பாய் வீதி, இணுவில்.**

**லோகேஸ்**

**கூரை ஓட்டுத் தொழிச்சாலை**

சீமெந்து கூரை ஓடுகள் முகட்டோடுகள் இயந்திர மூலம் தயாரிக்கப்பட்ட வெவ்வேறு அளவு பிரமாணம் கொண்ட கொங்கிறீட் கற்களை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

**பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்.**

**ரூபன் பந்தல் சேவை**

சொக்கட்டான் பந்தல், பூப்பந்தல், மணவறை மற்றும் கதிரைகள் இதர பொருட்கள் பெற்றுக்கொள்ள குறைந்த விலையில் நிறைந்த சேவையைப் பெற நாடவேண்டிய இடம்.

இணுவில் - மானிப்பாய் வீதி, இணுவில் T.P - 5311, 2644

**விஸ்ணு வீடியோ விஷன்**

பழைய, புதிய திரைப்படப் பிரதிகளுக்கும். C.D பிரதிகளுக்கும், பாடசாலை உபகரணங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றிற்கு நாடவேண்டிய இடம் -

பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில். (சி-728)


### சனசமூக நிலையத் திறப்பு விழா

(வடமராட்சிக் கிழக்கு)

கெருடாவில் அம்பிகை சனசமூக நிலையத்தின் திறப்புவிழா எதிர் வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நிலையத் தலைவர் இ.குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஏழு இலட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட இச்சனசமூக நிலையத்திற்கான நிதியை, கனடாவில் வசிக்கும் கெருடாவில் மக்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

### ஆசிரிய கலாசாலை விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளில் ஈராண்டுப் பயிற்சியைத் தொடருவதற்காக அரச, தனியார் பாடசாலைகளிலிருந்தும், பிரிவெனாக்களிலிருந்தும் பயிற்றப்படாத ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொலைக்கல்வி / பிரின்செட் பயிற்சியில் பயின்று இறுதிப் பரீட்சையில் தேர்ச்சிபெறாத ஆசிரியாகளும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

### காணாமற்போன சைக்கிள் குளத்திலிருந்து மீட்பு

(துன்னாலை)

துன்னாலை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து காணாமற் போன துவிச்சக்கரவண்டி - இரண்டு நாட்களின் பின்னர் தாமரைக் குளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி குளத்தில் மீன்பிடிக்கத் தூண்டில் போட்டபோது, தூண்டிலில் பாரமான பொருளொன்று அகப்பட்டு இழுக்கமுடியாது போகவே, வீதியால் சென்றவர்களின் உதவியுடன் குளத்தில் இறங்கித் தேடிய போது, காணாமற்போன சைக்கிள் அங்கிருந்து மீட்கப்பட்டது. (12)

### எயிட்ஸ் கருத்தரங்கு

(நவிண்டில்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் நடாத்தப்படும் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, இன்று கற்கோவளத்திலுள்ள கர்ப்பிணிகளின் கிளினிக்கில் நடைபெறும் எனப் பருத்தித்துறைச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (116)

### தேய்காய் கூறுவிலைகோரல்

(நவிண்டில்)

பளை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை, புதுக்காட்டுத் தோட்டத் தேங்காய்க்கான கூறு விலை கோரல் - எதிர்வரும் ஏப்ரல் 7 ஆம் திகதி மு.ப. 10 மணிக்குப் புதுக்காட்டுத் தோட்டத்தில் நடைபெறுமென, பளை மக்கள் பெருந்தோட்ட பொறுப்பதிகாரி சு.தவரத்தினசிங்கம் தெரிவித்தார். (116)


**வாழ்க வளமுடன்**

HAPPY BIRTHDAY

**மூன்றாவது அகவையில்**



பெயர் :பி.கிருத்திகன்
முகவரி:சாம்பல்தீவு, திருகோணமலை.

**ஐந்தாவது அகவையில்**

பெயர் :மு.அபிராம்
முகவரி:நந்தா இல்லம், செட்டித்தெரு, பருத்தித்துறை.



**பத்தாவது அகவையில்**



பெயர் :யோ.மிதுயா
முகவரி:ஓட்டுவெளி, மிருசுவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்



# சோழியன் குடுமிகள்



"உங்களுக்குக் கிடைத்துள்ள பதவி உயர்வு பற்றி அறியலாமோ மாஸ்டர்?"


ஆமாம்! தரம் ஒன்றிலிருந்து வகுப்பு ஒன்றிற்கு என் பதவி உயர்த்தப்பட்டுள்ளது!!

"நல்லது! உங்கள் புகைப்படம் ஒன்று தருவீர்களா. பத்திரிகையில் பாராட்டு விளம்பரம் போடுவதற்கு?"

"தம்பி அருமைத்துரை! எனக்குப் பதவி உயர்ந்ததால் எனக்குச் சம்பளம் அதிகரித்து, நானும் என் குடும்பமும் இலாபம் அடைந்தோமே தவிர, பிறருக்கோ உலகத்துக்கோ எந்த நன்மையும் ஏற்பட்டுவிடவில்லையே! என் புகழுக்காகப் பிறருக்கு வீண் செலவை ஏற்படுத்துவது தர்மத்துக்கு ஏற்காத செயல். என் தற்புகழ்ச்சிக்காக என்பணத்தைச் செலவிடுவதும் அருவருப்பான செய்கை. இப்படிப் புகழாசை கொண்டு குறுக்கு வழியில் பிரபலம் அடைய முற்பட்டு, உலகத்தின் ஏளனத்துக்கு ஆளாகிக் குளிக்கப்போய்ச் சேறு பூசிக் கொள்ளும் மடமை எனக்கு வேண்டாம். உண்மையில் புண்ணியமயமான புகழே புகழ். இன்று புண்ணியம் என்பது - இங்கு போரின் கொடுமையால் தாய் தந்தையை இழந்து அநாதைகளாகி வாழும் சிறுவர்களும், வீடிழந்து- சொத்திழந்த அகதிகளும், அபலைப் பெண்களும், கதியிழந்த முதியோரும் பராமரிக்கப்படும் அறநிலையங்களுக்கு நம் வருவாயின் ஒரு பங்கை வழங்கி வருவதுதான். அந்த அருள் நிழல்கள் வெளியிடும் வரவு செலவுக் கணக்கறிக்கையில் நம்பெயர்களைப் பிறர் காண்பதால் வரும் புகழே உச்சமான புகழ்" என்று பணிவாகச் சொல்லி அருமைத்துரையை அனுப்பி வைத்தேன். வழமை போல மறுநாட்காலை செய்தித்தாளைப் புரட்டியபோது, 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் தேர்வில் சித்தியெய்திய மைக்காக, பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவரின் மகளான- ஒரு சிறுமியின் புகைப் படத்தோடு பாராட்டி வாழ்த்தும் விளம்பரமும் வந்திருந்தது. பாராட்டி வாழ்த்துபவர், அருமைத்துரை நற்பணிமன்றம், உடுவில் என்று அடியில் இருந்தது.

**பஞ்சாட்சரம் கதைகள் 5**

# A-9 னை நீளும் நினைவுகள்



பகுதி இருபத்தைந்து

வவுனியாவினைத் தாண்டியே தெற்குக்கு
வழியை விட்டு வளர்ந்த A-9 இனைக்
கவிந்து இயற்கை கடையை விரித்தது.
ஹபரணைக்கப்பால் முற்றாகச் சிங்களக்
கவிதை கேட்டது. வயலின் வனப்புகள்,
கசிந்து முகில்கள் வணங்கும் விகாரைகள்,
தவழும் ஆறுகள், குளிக்கின்ற தாமரைத்
தரிசனங்கள், வரிசையாய்த் தென்னைகள்,


என இயற்கையின் இயல்பு கெடாமலே
A-9 அதன் இரண்டு மருங்கிலும்
கனத்திருந்தது அழகு; தமிழ் மட்டும்
மருந்துக்கும் அற்றிருந்தது; காலத்தின்
பிணக்கினால் இதே ரோட்டால் அகதியாய்ப்
பிரிந்த யாழ்ப்பாண முஸ்லிம்கள்... இங்கெலாம்
துணிந்திடைக்கிடை வாழத் தொடங்கினர்.
புத்தளம் வரைத் தமிழ் சொல் மலர்ந்தது...

தாண்டிக்குளத்திற்கு இப்பாலே... 'ஆனை
இறவு' மட்டும் தடையற்றிருந்தது.
தாண்டிக்குளம் வரை ரயிற்பாதை செத்ததால்
தண்டவாளங்கள் அரண்களாய் மாறின.
ஈரப்பெரிய குளத்துக்கு அப்பாலோ...
'எழில் நவீனமாய்' A-9 மாறிற்று.
ஈரப்பெரிய குளந்தானே எண்பத்து
மூன்றில் எத்தனை உயிரை எரித்தது?

-ஜெயங்கொண்டான்

# கிழக்கும் மேற்கும்

## சிறுத்தொண்டர் நாயனார் - அமிஸ் எட் அமிலஸ்



முருகு

சிவனடி யவர்களின் பசித்துயர் தீர்ப்பதைச்
சிரம்மேற் கொண்டவர் தன்பிள்ளைக் கறிவுடன்
சிவனடி யவருக்கு உணவுபடைத்தன்று
சிறப்புற்று நின்றார் சிவதொண்டர் ~ கிழக்கினில்!
தன்னுயிர் நண்பனின் கொடிய நோய் தீர்க்கத்
தன்பிள்ளை யுடைய குருதியில் நண்பனைக்
குளிக்கச் செய்தவனின் நோயினைத் தீர்த்தன்று
குணத்தினில் உயர்ந்தானோர் நண்பன் ~ மேற்கினில்!!

சோழமண்டலத்துள்ள ஊர்களில் ஒன்றாம் ~ திருச்
செங்காட்டாங் குடியில் மகாமாத்திரர் குலத்தில்
தோற்றிய பரஞ்சோதியார் போர்க்கலை வல்லவர்!
போர்வல்லார் என்பதால் பல்லவ மன்னனாம்
முதலாம் நரசிம்ம வர்மனின் பணிப்பேற்று
உத்தர தேசத்துள்ள வாதாபி நகரத்தைப்
படைகொண்டு தாக்கி வெற்றி கொண்டங்கு
கிடைத்த பெருஞ்செல்வம் அனைத்தையும் விரைந்து
திரட்டி வந்தவைகளை மன்னன் முன் வைத்தார்!
பரஞ்சோதி யாரின் பெருவீரச் செயல்களைப்
போற்றிய வேளையில் அமைச்சர்கள் மூலம்
பரஞ்சோதியா ரொரு சிவபக்தன் என்பதை
அறிந்ததும் பல்லவன் அஞ்சி நடுங்கியே
முத்தும் மணியுமா யள்ளிக் கொடுத்து
"இன்று முதல் நீர் சிவபெரு மானுக்கும்
சிவனடி யவர்கட்டும் விரும்பிய வண்ணமே
திருத்தொண்டு செய்வீர்" என விடைதந்து அனுப்பினான்!
பரஞ்சோதியாரும் தம்மில்லம் சேர்ந்து
"திருவெண் காட்டு நங்கை"யை மணம் செய்து
இல்லறம் நடத்தினார் நல்லற மாகவே!

(தொடரும்)

# பாலையும் சோலையும்

## கலாநிதி. சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

பயிலுநராக ஆசிரிய கலாசாலைக்குத் தெரியப் படுவோர் அக்காலத்தில் இரு பிரிவினராயிருந்தனர். ஒரு பிரிவினர்- ஆசிரிய தராதரப் பத்திரத்தோடு கற்பித்த, ஈராண்டு அரைச்சம்பள விடுப்புப் பெற்றோர். மற்றையோர்- சி.பா.த.ப. (எஸ்.எஸ்.சி.) பரீட்சையில் தேறி, மாணவ வழுவழுப்போடு பயிற்சிக்குத் தெரியப்பெற்றோர்.

இவர்களுக்கு மாதந்தோறும் இருபது ரூபா ஒப்பிய படியாக (allowance) வழங்கப்பட்டது.

கலாசாலையிலே- மாணவர் பாராளுமன்றம் என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இவ்வமைப்பின் சபாநாயகர்- சிரேஷ்ட மாணவர் தலைவர். பிரதமர்- சிரேஷ்ட உபமாணவ தலைவர். கல்வியமைச்சர், சுகாதார அமைச்சர், போக்குவரவு அமைச்சர், உணவமைச்சர் என்று மாணவரிலிருந்து தெரியப்பட்டோர் தமக்கென வகுக்கப்பட்ட பணிகளையாற்றி வந்தனர். உணவமைச்சர்- எமக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை நிர்ணயித்தல், சமையற்காரரோடு தொடர்பு கொண்டு உணவு சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்தல். அனுபவம் வாய்ந்த வயதான மூத்த மாணவர்களை இவ்விருவராகத் தெரிந்து, சுன்னாகம் சந்தைக்கு வாரம்தோறும் அனுப்பி, வேண்டிய பொருள்களை வாங்குவித்தல் ஆகிய பணிகளைப் புரிந்தார். இக்காலப்பிரிவில் எமக்கு வழங்கப்பட்ட இருபது ரூபாவில், ஒரு சிறுதொகை செலவினத்துள் அடங்காது மிச்சமாகி, அதனைத் தவணை முடிவில் எங்களுக்குப் பங்கிட்டு வழங்கினர் என்றால் அதனை இன்று நம்ப முடியாதுதான். அந்தப் பணத்தைக்கொண்டு விடுமுறைகளின்போது 25 சதம் கொடுத்துக் 'கலரி ரிக்கட்' வாங்கித் திரைப்படங்கள் பார்த்ததை இன்று இரைமீட்கையில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது.

முத்துவேற்பிள்ளை அவர்கள் தமது தற்காலிய அதிபர் பதவியிலிருந்து விலக, 1951 இல் அதிபராகச் சவரிமுத்து **M.A: (Lond), DIP-in-Ed (Lond)** பொறுப்பேற்றார். இவர் உளவியல் கல்வியியற் பாடங்களைத் திறம்படக் கற்பித்ததோடு, எங்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தவும், சமூக ஊடாட்டம், கலாரசனை, பேச்சாற்றல், நடிப்பாற்றல் என்பவற்றை வெளிப்படுத்தவும் பல வாய்ப்புக்களை ஏற்படுத்தியது குறிப்பிடத் தக்கதாகும். உடல் வளத்தைப்போலவே குரல் வளத்தையும் பெற்ற இவர், அது காலவரை மாணவராகிய எம்வசமிருந்த உணவு விநியோகப் பொறுப்பைத் தம் பொறுப்பாக்கிக்கொண்டார். இதன் விளைவு



கசப்பானது, விரிக்கிற் பெருகும்.

விரிவுரையாளர்களிலே மூத்தவர் கல்வியியல், சுகாதாரம் (வெள்ளி தோறும் பாடசாலைகளில் வைத்திய அதிகாரியான பெண்மணி ஒருவர் வந்து, சுகாதாரம் தொடர்பான விரிவுரைகளை ஆங்கிலத்தில் நிகழ்த்த இவரே எமக்கு மொழிபெயர்த்து வழங்குவர்.) ஆகியவற்றிலே நிபுணராகவும் விளங்கிய கந்தப்பு அவர்கள், சிரித்துச் சிரித்துப் பேசினாலும், எமது ஒழுங்கு, கட்டுப்பாட்டில் கடுமையாகவே இருந்து வந்தார்.

கணித, விஞ்ஞான பாடங்களுக்குப் பொறுப்பாளராகவும், விடுதிக் கண்காணிப்பாளராகவும் பணியாற்றி, கலாசாலைக் கட்டடப் பிரிவொன்றிலே தமது மனைவியுடன் வசித்தவர் திரு.கனகலிங்கம் B.Sc(Lond), Trained teacher's Certificate (Rangoon). காலையில் முதல் விரிவுரை மண்டபத்துள் நுழையும் அவர், கையில் வெண்கட்டியைச் சுழற்றியபடி, அடிக்கடி கரும்பலகையோடு உறவாடுவது வழக்கம். விரிவுரைக்கான ஒரு மணித்தியாலமும் அயராது கடுமையான கணிதத்தினை எமது மண்டைக்குள் புகுத்த அவர் மேற்கொள்ளும் முயற்சி மகத்தானது. அவருடைய கணித அறிவும் மடக்கையின் உதவியின்றியே வாய்ப்பாட்டினை அநாயாசமாக ஒப்புவிக்கும் திறமையும் வியப்பை ஊட்டும். விவேகிகளுக்கு அவரின் விரிவுரை விருந்து என்றால் என் போன்றவர்களுக்கோ பேதி மருந்து. அந்த அதிகாலைப் பொழுதிலே நித்திரா தேவி எங்களை அரவணைத்துக் கொள்வதையும் பொருட்படுத்தாது, அவரின் விரிவுரையும், வெண்கட்டி விளையாடலும் ஒரே சீராகச்செல்வது வழக்கம்.

பிற்பகல் வேளைகளில் அவர் எங்களோடு உதைபந்தாட்டத்தில் கலந்துகொள்வார். கிண்டலும், நக்கலும் நிறைந்த அவரின் பேச்சுக்கள் அந்நேரத்தில் கலகலப்பை வெளிப்படுத்தி மகிழ்வூட்டும். பாரிய உருவம் கொண்ட எங்கள் அதிபரை (சவரிமுத்து அவர்களைக்) 'கனம் அதிபர்' என்றும் அதனையே வேடிக்கையாக மொழிபெயர்த்து Heavy Weight அதிபர் என்றும் கூறி அவர் எங்கள் வயிற்றைச் சிரிப்பால் புண்ணாக்குவது வழக்கமாயிற்று.

வரலாற்றுப் பாடத்தைச் சுவைபடக் கற்பித்த வேதநாயகம் அவர்கள்- கல்கத்தாப் பல்கலைக்கழகக் கலைமாணியாய் முதல் வகுப்பில் தேர்ந்தவர். ஆங்கில ஆசிரிய பயிற்சித் தராதரம் (முதல் வகுப்பு) பெற்றவர். அக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த சங்கீத வித்துவான் புத்துவாட்டிச் சோமுவிடம் வயலினும் வாய்ப்பாட்டும் முறைமையாகக் கற்றவர். பின்னாளிலே தமிழ்த் திரைப்படம் ஒன்றினைக் (கடமையின் எல்லை?) இயக்கி வெளியிட்டவர்.

(தொடரும்)

# இலக்கியச் சோலை

# அம்மா அழாதே!


குறுநாவல்

பகுதி 2

-அருணாசலம்

எல்லாக் கிடாயும் அப்படி ஆகும் என்றில்லை. அத்தை வீட்டுக் குறுணல் ஆடு ஈணுகிற கிடாய்க் குட்டிகள் வெட்டப்படுகிறபோதும், குறுணியாகவே இருக்கும். பெருஞ்சாவலை வெட்டின கணக்கு இறைச்சி கிடைக்கும். அதற்காக அவை சாப்பிடுவது கொஞ்சமல்ல. பக்கத்து ராசம்மாக்கா வீட்டிலும், சப்பறம் சின்னத்துரையண்ணை வீட்டிலும் புகுந்து களவெடுத்துச் சாப்பிட்டவைபோக, அத்தையும் ஒவ்வொரு நாளும் - புல்லுச் செதுக்கியும், குழை வெட்டியும், பழுத்தல் பொறுக்கியும் ஆட்டுக்குக் குடுக்கிறாதான். ஆனால், அம்மா போலை இல்லை. அத்தைக்கு ஆறுபிள்ளைகள். அவை யளைப் பராமரிக்கிறதே பெரும் பாடு. அம்மாவுக்கு இரண்டு பேர் தானே? அதாலைதான் நாயையும், கோழியையும், ஆட்டையும், பூனையையும் தன்ரை பிள்ளைகள் ஆக்கினா. வெள்ளிக்கிழமைகளில் மரக்கறி எங்களுக்கு ருசித்தது. 'ரொமி'க்கு அது பிடிக்காது. அம்மா சோத்துடன் தயிர் விட்டுக் குழைச்சு வைச்சா. வெள்ளிக்கிழமைகளில் அதைத்தின்றது. பிறகு தயிரும் மரக்கறிகளில் ஒன்றுதான் என்று ரொமிக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அதைத் தின்ன மறுத்தது. அம்மா கருவாடு வாங்கி அதன் தலைகளைக் கிள்ளி சோத்துடன் குழைத்து வெள்ளிக்கிழமைகளில் வைத்தா. ரொமி வாலாட்டித் தின்றது. 'உனக்கு ஆகலும்.செல்லம் கூடிப்போச்சுது' என்று அம்மா ரொமியின் குண்டியில் அடித்தா. அது சிரித்து விட்டு 'அவுக், அவுக்'கென்று தின்றது.

அம்மா வளர்ப்பன எல்லாம் சாப்பாட்டில் சில கட்டுப்பாடுகளை வைத்திருந்தன. அப்படிச் சொல்லக்கூடாது. ருசியில் சில கட்டுப்பாடுகளை வைத்திருந்தன. கோழிகளுக்கு வீட்டினுள் புகுந்து அரிசி, உழுந்து, பயறு, பருப்பு அல்லது சோறு தின்பதிலும், மிகக் கவனமாகச் சிறுவேலி அடைத்து, கீரைக் கொட்டைபோட்டால், அவை முளையாகும்போது தின்பதிலும் உள்ள ருசி வேறெதிலும் கிடைப்பதில்லை. ஆட்டுக்கு ஒரு வரிசை உண்டு- முதல் விருப்பம் கிளுவங் குழையில், அடுத்தது சீமைக்கிளுவையில், பிறகு முள்முருக்கங் குழை பிடிக்கும் அவ்வளவுதான். அவ்வளவேதான். மஞ்சமுன்னாக் குழை என்றால் மணந்து பார்த்து விட்டு வெறுப்புடன் முகத்தைத் திருப்பும். ஒன்றும் இல்லையே என்று வேப்பங்குழை அம்மா போட்டால், மணந்தும் பார்க்காது. 'இதையும் ஒரு சாப்பாடு என்று எனக்குப் போடுறியோ?' என்று அம்மாவை வெறுப்புடன் பார்க்கும்.



வேறொன்று எங்கள் ஆட்டுக்கு மிகப்பிடிக்கும். அதைப் பிறகு சொல்கிறேன். நாங்களும் அப்படித்தான். மரக்கறிகளில் வெள்ளைக் கறியில் நாட்டமில்லை. தக்காளி சம்பந்தப்பட்ட எதுவும் பிடிப்பதில்லை. வறைகளில் துண்டற விருப்பமில்லை. வாழைப் பொத்தி வறை என்றால் கக்கூசு ஒழுங்காகப் போகும் என்பார் அம்மா. அதுக்காக அந்தக் கச்சலை சாப்பிட ஏலுமோ? இப்ப ஏதோ ஒழுங்காப் போகேல்லையே? முறுக்குப் பிழிஞ்சமாதிரி என்ன அழகாப் போகுது! மீன் என்றால் விளைமீன்தான். அறக்குளா, கருங்கண்ணிப் பாரை, சீலாவும் பிடிக்கும். முரல் பொரியல், சூடைப்பொரியல் நல்ல விருப்பம். பெரிய றால் என்றால் அட்டை மாதிரி அது சுருண்டிருக்கும் அரியண்டம். முரலும் சாடையாப் பாம்பு எண்ட நினைவு வரப் பார்க்கும். மற்றும்படி, சுறா, திருக்கை, கணவாய் எதுவும் பிடிப்பதில்லை. நண்டு உடைச்சுச் சாப்பிடப் பஞ்சி. இறைச்சியில் கிடாய் இறைச்சி மாத்திரம்தான். அதுவும் வேள்வியிறைச்சி. ஆக மிஞ்சினால் பங்கிறைச்சி. கோழி இறைச்சி கூட வீட்டில் இல்லை. அது பேலுவதைப் பார்த்த பிறகும் குப்பையிலுள்ள புழுக்கள் அரியண்டங்களைக் கொத்துவதைப் பாத்த பிறகும் கோழி இறைச்சியைச் சாப்பிட முடியுமே?

வைகாசி தொடங்கினால் ஆனி, ஆடி, ஆவணி வரைக்கும் எங்கள் வீட்டு ஆட்டுக்குக் கொண்டாட்டம்தான். அதற்கு ருசியான சாப்பாடு கிடைக்கும். உனக்கு ருசியான சாப்பாடு கேட்குதோ, மூதேசி! 'அம்மா திட்டித் திட்டி நொங்கு சீவுவா. நொங்கு பிறகு சீக்காயா மாறும் அதுவும் ஆட்டுக்குப் பிடிக்கும். சின்ன மணியண்ணை அல்லது செல்லத்துரையண்ணை குலை குலையா நொங்கு அல்லது சீக்காய் வெட்டித் தருவினம். நொங்கின் பணிவில் உடைத்து, மூள் சீவி, மூன்று கண் கண்டு, ஒரு கண்ணில் சுண்டு விரல் வைத்து அமத்த சர்ரெண்டு நொங்கின் நீர் கண்ணிற்குள்பிய்ச்சி அடிக்கும். வழித்து பணிவிலில் விட்டுக்குடிக்க அது அற்புதமான பானம். நொங்கிலும், சீக்காயிலும் ஆட் டுக்கு ஏன் அவ்வளவு விருப்பம்? ஒரு துண்டு சீக்காயைச் சப்பிப் பார்த்தேன். அது இனித்தது. அம்மாவின் ஆடு என்றால் லேசானதா? பனையில் எல்லாப் பயன்பாடு பற்றியும் சொன்னவர்கள்- ஆட்டுக்கு உவப்பானதாய் இருக்கும் என்பதை ஏன் சொல்லாமல் விட்டார்கள்?

அம்மாள் கோயில் விரதக் களைப்பு என்றும் அம்மா பார்க்க மாட்டா. பகல் திருவிழா முடிந்து, விரதச் சாப்பாடு சாப்பிட்டு, களைப்புக்குக் கண்ணயரமாட்டா. கிழக்கு வாசல் பக்கம் இறக்கியிருக்கிற பத்திக்குள்ளை இருந்து நெஞ்சில் வைத்து நொங்கு சீவி, சீக்காய் என்றால் தோல் சீவி துண்டு துண்டாய் வெட்டி ஆட்டுக்கு வைப்பா. குழைகளையும், புல்லுகளையும் வெயில் எரித்திருக்கிற காலம்தான் அது. நொங்கு, சீக்காய்தான் ஏலும். கிழக்குவாசல் பக்கம் வீடு மறைக்க, தென்மேற்கு மூலையிலிருந்து சோளக்காற்று குளுகுளுவென்று வரும். தடைசெய்ய ஏதுமில்லை. மரங்கள் இருந்து தடுத்தனதான். ஆனால் அவற்றைத் தடையென்று சொல்ல இயலாது. சோளகத்தை இன்னும் குளிரூட்டி அனுப்பியது என்று சொல்லலாம். உரப்புடன் ஏறி உக்கிரமாய் வீசும் சோளகத்தைத் தடுக்க எவரினால் ஏலும்? எவருக்கும் வளைந்து கொடுக்க முடியாப் பனைகூட ஆடி, அசைந்துதான் சோளகத்தை அங்கால் அனுப்பியது. சோளகத்தின் குளிர்வில் அம்மாவின் கண் சொக்கும். அதுதான் அம்மாவின் ஆனந்தம். விரதக் களைப்புக்கு அப்பா பாய் போட்டுப் படுப்பார். அம்மா வேலை செய்து கொண்டிருப்பது உறுத்தும். சாடையா அயர்வார். சடக்கென முழித்து 'அட, அயர்ந்து போனனே' என்று முணுமுணுப்பார்.

அம்மாவின் செழிப்பான உணவு ஆட்டுக்கு இரண்டு கிடாய்க்குட்டிகளை ஒன்றாகத் தந்தது. ஒரு கிடாய்க்குட்டி எனக்கு. மற்றது அக்காவுக்கு. எனது கிடாய்க் குட்டிக்கு தோட்டக் கிணத்தடியிலை பிலாப்பழுத்தல் குத்தினன். அது ஆபூர்வமாய்த்தான் மஞ்சளாய் பழுத்துச் சொரியும். சொரியும் என்று சொல்லக்கூடாது. ஒன்றிரண்டு விழும். சின்னையன் இரவில் களவாகப் பிலாமரத்தில் குழைகள் வெட்டுகிறான். சின்னையனைக் கண்டு பாம்புகளும், பேய்களும் அஞ்சுகின்றனவோ தெரியவில்லை. ஏனென்றால்- பாம்புகள் உலாவுகிற இடம் அது. பேய்கள் உலாவுவது பற்றி என்னிடம் நீண்ட கதைகளே உண்டு. ஒன்றிரண்டு பழுத்தல்கள் கிணற்றுக்குள் விழுவதை ஒருமுறை ஏக்கத்துடன் எட்டிப்பாாத்தேன். பிலாப்பழுத்தல் மிதக்கவில்லை. வேறொன்று மிதந்தது. அது செட்டி நாகம்! ஏறிவந்து, என்னை அது கொத்தமுடியாது என்ற எனக்கு உறுதியாய்த் தெரியும். நான் வாளியைக் கிணற்றினுள் விட்டேன். நீந்தி ஒருபுறம் ஒதுங்கியது பாம்பு. கயிற்றால் அரக்கி அரக்கி வாளியைப் பாம்பிற்குக் கிட்ட கொண்டுபோனேன். பாம்பு வாளிக்கு ஆழ ஒரு கொத்துப் போட்டது. அந்தக் கொத்து எனக்கு விழுந்திருந்தால் நான் அந்த இடத்திலேயே சரி! பாம்பு கொத்திய கொத்தில் வாளிபோய் மறுபக்கச் சுவரில் அடிபட்டது. நான் உடனே கையை விட்டிட்டன். அடித்துலா நிலத்தில் அடிபட்டது. செல்லத்துரையண்ணைக்கு ஓடிப்போய் சொன்னன். அவர்தான் கள்ளிறக்கப் பனையில் ஏறி, பனையில் இருந்தபடியே தொண்ணூறு புள்ளிப் புடையன் போகுமிடம் பார்த்து, எந்தப் புற்றுக்கை போய்ச் சுருண்டு கிடக்கிறது என்று கண்டு, கள்ளைக் கொண்டுபோய் கள்ளுக் கொட்டிலில் குடுத்துவிட்டு வந்து, மண்வெட்டி கொண்டு பொந்தை வெட்டி, புடையனை வெளியில் எடுத்து அடிப்பவர். அவருக்குக் கிணற்றுக்குள் இருக்கும் செட்டி நாகம் ஒரு விசயமா இருக்காது. செல்லத்துரையண்ணை காய்ஞ்ச இலந்தைக் கொப்போடை வந்தார். கயிறு கட்டி கிணற்றினுள் விட்டார். பாம்பு மேலேறி வந்தது. தொழுத்து விளைந்த செட்டி நாகத்தைப் பொன்னாரண்ணையின் தோட்டக் காணியில் அன்று நான் கண்டேன்.

ஆணோ, பெண்ணோ அதன் துணை உங்கினேக்கைதானே உலாவித்திரியுது. செல்லத்துரை அண்ணை அடித்துக்கொன்றாலும், காட்டிக்கொடுத்தது நான்தானே! எவ்வளோவோ ஆற்றல் வாய்ந்த நாகத்திற்கு அதைக் கண்டுபிடிப்பது பெரிய கஷ்டமா? இரண்டொரு பிலாப்பழுத்தல் பொறுக்கிறத்திற்காக, நாகம் விரிக்கிற சூழ்ச்சிவலையில் சிக்குவதற்கு நான் என்ன பேயனா?

(தொடரும்)

# நூல் அகம்




அண்மையில் வெளிவந்த கவிதைத் தொகுதிகளில்- த.ஜெயசீலனின் "கனவுகளின் எல்லை"யும் குறிப்பிட வேண்டியவொன்றாகும். ஈழத்தின் செயலியக்கம் மிக்க இளங்கவிஞர்களில் த.ஜெயசீலனுமொருவர். பல கவியரங்குகளில் பங்குபற்றி வருபவரென்பதுடன், தொடர்ந்து எழுதியும் வருபவர். ஆசிரியத் தொழில் புரிந்துவரும் ஒரு விஞ்ஞான பட்டதாரியான இவர், தனக்கெனவொரு தனித்துவமான கவிதை இயல்பைக் கொண்டிருப்பவர். இவரின் இயல்புக்கு "கனவுகளின் எல்லை" சிறந்த உதாரணமாகியுள்ளது.

புதுக்கவிதையானது- சொற்களின் எல்லைகளுக்கப்பால் உணர்வின் ஆழத்தையும், உள்ளக்குமுறல்களையும் வெளிப்படுத்தி நிற்கும் சிறந்த ஊடகம். இதில் உருவகங்களும், படிமங்களும் பேசாப் பொருளை பேசிநிற்கும் இயல்பினை உடையவை. இந்தப் பண்புகளை ஜெயசீலனின் கவிதைகளிலும் காணலாம். அவர் புதுக்கவிதையின் இயல்பை வாலாயமாக்கிக் கொண்ட கவிஞர் என்பதற்கு இக்கவிதைகள் சான்று பகருகின்றன. உதாரணமாகப் பின்வரும் வரிகளை நோக்கின்

*"நாளைக்கும்*
*எங்கள் நந்தவனக் கொண்டைகளில்*
*பூ பூக்கும்.*
*தென்றல் புனுகு பூசிப்பாடிவரும்*
*இரத்தங் கசிந்து இரணமான கடல் கூட*
*புத்தம் புதிதாகிப் புறுபுறுக்கும்..."*

ஏறத்தாழ எழுபத்தைந்து கவிதைகளை உள்ளடக்கி நிற்கும் இக்கவிதைகளுக்கூடாக கவிஞனின் ஆவேசம், ஆர்வம், சமூகம் மேற்கொண்ட பார்வை, யுத்தத்தின் சூழல், போலிகள் எனப்பலவும் பாடுபொருளாகிப் பரந்து நிற்கின்றன. ஆடுதல், பாடுதல், சித்திரம், கவியாதியான கலைகளில் ஈடுபட்டென்றும் நடப்பவர். பிறர் ஈனநிலைகண்டு துள்ளுபவ்ர் என்ற பாரதியின் கூற்றுக்கொப்ப இந்தக் கவிதைகளுக்கூடாக, கவிஞரின் ஆவேசம் சிறப்பாக வெளிப்படுகின்றது. உதாரணமாக- "நாங்கள்" என்ற குறுங்கவிதையில் அவரது உணர்வு சிறப்புற வெளிப்படுகின்றது.

*"நாங்கள்*
*நெஞ்சில் கனல்கின்ற ஞான நெருப்பிருந்து*
*குஞ்செடுத்து... மண்ணின் கொடுமைகளாம் - பஞ்சைக்*
*கொளுத்தக் கவிவளர்ப்போம்! கூற்றெதிர்தால் நெற்றி*
*விழிதிறந்துஞ் சொல்வோம் விடை"*

"கனவுகள்" என்று தன் கவிதைக்குப் பொருளுரைத்த கவிஞன், நிஜங்களையே பாடுபொருளாக்கிப் படைத்துள்ளமை, கவிதைகளின் கருவுக்குள் வெளிப்பட்டு நிற்கின்ற உண்மை.

ஈழத்தின் கலை இலக்கிய வளத்திற்குப் பெருமைதரும் படைப்பாக நிற்கும் இக்கவிதைத் தொகுதி காலத்தால் வாழுமென்பதில் ஐயமில்லை.

- எஸ்.சாந்தகுமார்

# சந்திப்பும் நினைவுகளும்

எழுத்தாளர் கே.டானியலின் 17 ஆவது நினைவு நாள் கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த மூத்த படைப்பாளியை அன்று சந்தித்த நினைவுகள் இன்றுபோல் இருக்கின்றன.

யாழ்.வெலிங்கடன் சந்திக்கு அருகாமையில் இருந்த 'ஸ்ரார் எலக்ரிக்கல் என்ஜினியேர்ஸ்' என்ற நிறுவகத்தின் அதிபர் அவர். ஐம்பது அறுபது இயந்திரங்கள் புடைசூழ, நிறுவகத்தின் முன்னே ஒரு சிறுமேசையில் அவர் அமர்ந்திருப்பார். அவரை சந்திக்க வரும் வாடிக்கையாளர்களும், படைப்பாளிகளும் அமர்வதற்குச் சிறுவாங்கில் ஒன்றும் இருந்தது. வருவோர் போவோருக்கும் தேநீர் எடுத்துக் கொடுத்து, வருபவர்களிடம் எந்தநேரமும் அளவளாவிக் கொண்டிருப்பார்.

சாந்தமான மனிதர். அவர் அணிந்திருக்கும் கண்ணாடிக்குள் அமைந்திருக்கும் அவர் கண்களில் அறிவொளி பிரகாசித்துக் கொண்டிருக்கும். ஐந்தாம் வகுப்பு படித்தவர் போலல்லாது ஒரு பேராசிரியர், ஒரு மேதாவி போன்றவர்களின் ஆற்றல், அனுபவம் உள்ளவராக அவர்கண்கள் பிரகாசிக்கும்.

ஒருமுறை அவர் எழுதிய 'பஞ்சமர்' நாவல் கொழும்பில் சரஸ்வதி மண்டபத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அந்நூல் பற்றிப் பேராசிரியர் சிவத்தம்பி ஆய்வுரை வழங்கினார். நாவல் பற்றி காரசாரமாகப் பேராசிரியர் சிவத்தம்பியால் விமர்சிக்கப்பட்டது. அதற்கு அவர் எழுந்து பேராசிரியர் சிவத்தம்பியின் விமர்சனத்துக்குப் பதிலளித்துப் பேசியது இன்றும் நினைவுகளாய் விரிகின்றன.

1971 ஆம் ஆண்டு சிறைவாசத்தில் இருந்த போதுதான் 'பஞ்சமர்' நாவல் எழுதப்பட்டது. இந்த நாவல் சாகித்திய மண்டலப் பரிசும் பெற்றது.

முந்நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய அவர்- 'டானியல் கதைகள்', உலகங்கள் வெல்லப்படுகின்றன' என்று இரு சிறுகதைத் தொகுதிகளைத் தான் வெளியிட்டவர்.

பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பூமரங்கள், தண்ணீர், பஞ்ச கோணங்கள், மையக் குறி, முருங்கையிலைக்கஞ்சி, சொக்கட்டான், பஞ்சமர் இரண்டாம் பகுதி ஆகியன இவர் எழுதிய நாவலாகும். 'கானல்' - பல்கலைக்கழகப் பாடநெறிக்குப் பாடநூலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

அவர் இந்தியாவுக்குச் சென்றபோது, தஞ்சை மாவட்டத்தில் 1986 ஆம் வருடம் மார்ச் 23 ஆம் திகதி அமரரானார். அவரின் இழப்பு ஈழத்திலக்கிய உலகிற்குப் பேரிழப்பாகும்.

- மணிசேகரன்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
ஒவ்வொருவரதும் செயலே அவரை யாரென உலகிற்கு உணர்த்தும்.
-பிராங்ளின் ரூஸ்வெல்ட்

# நமது நோக்கு

## உயரிய பணி!

விடுதலைப்புலிகளின் பல்வேறு துறைசார் படையணிகளின் வளர்ச்சியும், திறன் மிகுந்த செயற்பாடுகளும் - உலகளாவிய ரீதியில் பாராட்டுக்களையும், வியப்பையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் - புலிகளின் மருத்துவப் பிரிவு ஆற்றிவரும் சேவைகள், மக்களின் மிகுந்த நன்றியறிதலுக்கு உரியவையாகின்றன.

தனியே அமைப்புசார் பணிகள் என்றில்லாது மக்களுக்காகவும் தமது சேவைகளை வழங்க முன்வந்து அரும் பணியாற்றிவரும் - விடுதலைப் புலிகள் மருத்துவப்பிரிவினரின் சேவை - அடிப்படைச் சுகாதார வசதிகளின்றி வாடும் மக்களுக்கும், உடனடி மருத்துவசிகிச்சை தேவைப்படுவோருக்கும் - காலத்தால் செய்த உதவியாக அமைந்திருக்கின்றது/ அமைந்துவருகின்றது.

இந்தவகையில் - வன்னிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உயிர்காப்புச் சம்பவமொன்று - மருத்துவ அணியினரின் சிறந்த சேவைக்கு எடுத்துக்காட்டாகியுள்ளது.

கொழும்பிலிருந்து முல்லைத்தீவு - மாத்தளன் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண், புளியங்குளம் - நெடுங்கேணி வீதிவழியாக பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது - நயினாமடுவுக்கும் குளவிசுட்டானுக்கும் இடையே காட்டுப்பகுதியில் அவருக்குத் திடீரென பிரசவவலி ஏற்பட்டது.

அவ்வேளை - அதே பஸ்ஸில் பயணம் செய்த - தியாகதீபம் திலீபன் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவப் போராளியான தில்லைநம்பி ஒரு பிரசவச் சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாதபோதும் - திறமையுடனும், புத்திசாதுரியத்துடனும் பணியாற்றி - தனது ஒப்பற்ற உதவி மூலம் - தாயையும் சேயையும் காப்பாற்றினார்.

இந்த இளம் போராளி மேற்கொண்ட சமயோசிதமும், அவரது திறமையும் - விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுக்கு - அவர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கு- இன்னுமொரு மணி மகுடத்தைச் சூட்டியிருக்கிறது.

போர்க்காலங்களில் - படுகாயமடைந்து விழுப்புண் பெற்றுவரும் போராளிகளுக்கு - தம்வசமுள்ள மிகக்குறைந்த வசதிகளைக் கொண்டும், மழையெனப் பொழியும் எறிகணைகளுக்குள்ளும், ரவைகளுக்குள்ளும் துணிவுடன் நின்றும் - களத்தில் நடைபெறும் நேரடிச் சமருக்குக் குறைவில்லாது - பெரும் போராட்டத்துடன், மருத்துவப் பிரிவினர் ஆற்றிய பணிகள் இராணுவ நிபுணர்களையே வியப்புக்குள்ளாக்கியிருக்கின்றன.

போர்முனை திறக்கப்பட்டு - படுகாயமடையும் படையினரைச் சுமந்து செல்வதற்கென ஹெலிகளும், விமானங்களும் பறந்து செல்ல, கொழும்பின் தேசிய வைத்திய சாலை முதல், நாட்டின் மிகப்பெரிய மருத்துவமனைகள் அனைத்தும் தயாராகி நிற்க, தேர்ச்சி பெற்ற வைத்திய நிபுணர்கள் உடனடிச் சேவைக்குக் குழுமிநிற்க -

மறுபுறமோ - வெட்ட வெளிகளிலும், காட்டுப் புறங்களிலும், நிலக்கீழ் அறைகளிலும் - விடுதலைப் புலிகளின் மருத்துவப் போராளிகள் - உயிர்காக்கச்செய்யும் சேவையை வார்த்தைகளால் வடிக்கமுடியாது.

அது மட்டுமல்ல - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளெங்கும் மருத்துவப் பொருட்களுக்குத் தடைவிதித்து - இனஅழிப்பு அரக்கத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டபோது - போர்க்களங்களில் படுகாயமடைந்து உயிருக்குப் போராடும் போராளிகளைக் காக்கவென எண்ணிறைந்த சிரமத்தின் மத்தியில் தமக்குக் கிடைத்த மருந்துப் பொருட்களை - மக்களுக்கும் அளித்து - மருத்துவப் பிரிவு ஆற்றிய சேவை பல்லாயிரம் மக்களைப் பாதுகாத்தது.

இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்குரிய அடிப்படைச் சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தும், தக்க ஆலோசனைகளை வழங்கியும் -

தமது நடமாடும் சேவையின் மூலம், பின்தங்கிய பகுதிகளெல்லாவற்றுக்கும் நேரடியாகச் சென்று அம்மக்களைக் காத்தும் -

கொலரா, வாந்திபேதி, டெங்கு போன்ற கொள்ளை நோய்கள் தாக்கும் ஆபத்து எழுந்தபோதெல்லாம் - மிகத் தீவிரமும், கண்காணிப்புடனும் அதியுயர் எச்சரிக்கையுடனும் நிலைமையைக் கையாண்டு - இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளிலெல்லாம் உயிர்ப்பலிகள் தினமும் நிகழ - தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இந்தத் தொற்று நோய்களுக்கு எதிராக யுத்தம் நடாத்தி வெற்றி பெற்றும், மருத்துவ சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்ற போராளிகள் பற்றி உலகம் அறிந்தது முழுமையானதல்ல.

மருத்துவப் போராளிகளின் சேவையைப் பெற்ற ஒவ்வொருவரதும் உள்ளத்திலிருந்தும் எழும் நன்றியுணர்ச்சியே - அந்தப் போராளிகளின் பெருமையைச் சொல்லத்தகுதியானவை.

இன்று அமைதிக்காலத்தில் - தமது பணிகளை மக்களை நோக்கி இன்னமும் விஸ்தரித்து - யாழ். குடாநாட்டில் மருத்துவப் போராளிகளும், சுகாதாரப் பிரிவினரும் தமது பெறுமதி மிக்க பணிகளைத் தொடர்கின்றனர்.

மருத்துவப் போராளிகளின் தன்னலமற்ற சேவையும், திறமையும், அர்ப்பணிப்பும் - போற்றப்பட வேண்டியவை மட்டுமல்ல, என்றும் பேணப்பட வேண்டியதுமாகும்.

# தனது மக்கள் செல்வாக்கை அறியும்படி ஆலோசகர்களை சந்திரிகா பணிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு - மக்கள் மத்தியிலிருக்கும் செல்வாக்குச் சம்பந்தமாகக் கணிப்பீடு ஒன்றைச் செய்யுமாறு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது அரசியல் ஆலோசகர்களுக்குப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி லண்டனுக்கு விஜயம் செய்வதற்கு முன்பு இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

இந்தக் கணிப்பீட்டைக்கொண்டு எதிர்காலத்தில் அரசியலை எவ்வாறு வழி நடத்துவதென்று தீர்மானிக்க உதவியாக இருக்குமென அவர் நம்புவதாகத் தெரியவருகின்றது.

இந்தக் கணிப்பீட்டில் சந்திரிகா - தொடர்ந்து ஜனாதிபதி பதவியில் இருக்க வேண்டுமா? அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகள் மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் மாற்றப்பட வேண்டுமா? என்பன பற்றியும் ஆராயுமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில், ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது பற்றியும் கணிப்பீட்டில் கண்டறியுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, அநுரா பண்டாரநாயக்க, கரு ஜயசூரிய, லக்ஷ்மன் கதிர்காமர், விமல் வீரவன்ச ஆகியோரின் செல்வாக்குக் குறித்தும் தனித்தனியாகக் கணிப்பீட்டில் ஆராயுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# இருதய, பக்கவாத நோய்களுக்கு வருடத்தில் 1 கோடிப் பேர் பலி!

உலகில் இருதயநோயினாலும், பக்கவாதத்தினாலும் வருடந்தோறும் ஒரு கோடி இருபது லட்சம் மக்கள் பலியாவதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் இருதய நோய், பக்கவாதம் தொடர்பான கருத்தரங்கு கொழும்பு ரேணுகா ஹோட்டேலில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கிலேயே மேற்படி தகவல் வெளியிடப்பட்டது.

இருதயநோய், பக்கவாதம் ஆகியவற்றின் தாக்கம் இலங்கையிலும் கணிசமாக உள்ளதாகவும், இதனைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியம் என்றும் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள வைத்திய சாலைகளின் சேவைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்றும், மேற்படி நோய்களுக்கு உலகத் தரம் வாய்ந்த மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனம் - அரசாங்கத்துக்கு கருத்துத் தெரிவித்துள்ளது.

# கண்ணிவெடி அகற்றல் தென்மராட்சியில் ஆரம்பம்

தென்மராட்சி சரசாலைப் பகுதியில் சில மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் பணிகள் ரொங்கோ அமைப்பினால் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தென்மராட்சி பிரதேசங்களில் ஏற்பட்ட யுத்தத்தால், பல இடங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. சரசாலைப் பகுதியில் ஏற்கனவே கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகள் யாவும் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. அமெரிக்காவின் செயற்திட்டத்தின் கீழ் ரொங்கோ அமைப்பு - சரசாலை, கெருடாவில் ஆகிய இடங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதிகள் இனங்காணப்பட்டு, அவ்விடங்களில் கண்ணிவெடி அகற்றும் பணியில் நிபுணர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (34)

# மீள்குடியமர்வு, பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள்; மன்னாரில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராய்வு!

(வவுனியா)

மன்னார் மாவட்டத்தில் மக்களை மீள்குடியமர்தல் மற்றும் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராயும் முக்கிய கூட்டம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் காலை மன்னார் அரச செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் தரப்பில் மூர்த்தி, இலக்கியன் ஆகியோரும், அரசதரப்பில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திஸ்ஸ கரலியத்த, மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி, பிரிகேடியர் பெர்ணான்டோ ஆகியோருடன், உதவி அரசாங்க அதிபர், மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டகை, யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள், மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை, நாவற்குளம், திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளில் மக்களை மீள்குடியமர்த்த வேண்டும் என்றும்,

மக்கள் மீளக்குடியமர்வதற்கு வசதியாக அந்தப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து, பல்வேறு இடங்களிலும் வசித்துவரும் சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், அவர்கள் மீள்குடியமர்வதற்கான அரச உதவிகளை வழங்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மக்கள் மீள்குடியமர்த்துவதற்கான வேலைகளைத் துரிதமாக மேற்கொள்வது என்றும், மேற்படி வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், அவற்றினை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அடுத்த சந்திப்பை விரைவில் நடத்துவதாகவும் அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது. (03)

# ஜே.வி.பியுடனான கூட்டணிக்கு சந்திரிகா தொகுதியில் எதிர்ப்பு!

சமாதானத்துக்கு எதிராகச் செயற்படும் ஜனதா விமுக்தி பெரமுனவுடன் - பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமானால், தான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து இராஜினாமாச் செய்வேன் என அத்தனகலப் பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர் ஏ.ஏ.பி.கருணாரத்ன தெரிவித்துள்ளார். சபைத்தலைவர் சுகததாஸ தலைமையில் இடம்பெற்ற சபையின் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தை, பொதுஜன ஐக்கிய முன்னணியால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான ஜே.வி.பியோடு - பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டுச் சேர்ந்தால், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பின்னடைவு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தனகல-சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான சந்திரிகாவின் சொந்தத் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

# கொட்டாஞ்சேனையில் இன்னொரு சிறுமி மீட்பு!

உறுகொடவத்தவில் சிறுமி ஒருவர் அடைத்து வைக்கப்பட்டிருந்த சம்பவம் தொடர்பான பரபரப்பு அடங்க முன்னர், கொட்டாஞ்சேனையில் உள்ள வீடொன்றிலிருந்து இன்னொரு சிறுமியும் மீட்கப்பட்டுள்ளார்.

வீடொன்றில் சிறுமி ஒருவர் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகப் பொதுமக்கள் தகவல் கொடுத்ததையடுத்து விரைந்த பொலிஸார் அச்சிறுமியை மீட்டனர்.

சிறுமி தற்போது சிறுவர் பராமரிப்பு இல்லமொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாகப் பொலிஸார் - நீதிமன்றில், சிறுமியைத் தடுத்து வைத்திருந்த பெண்ணுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

# புற்றுநோய்ச் சிகிச்சைக் கிராமம்; யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சைக் கிராமம் அமைக்கப்பட இருக்கிறது. இதற்கான திட்டவரைபுகள், தொடர்பான கருத்தரங்கு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.அரசசார்பற்ற நிறுவனங்களும், வைத்தியசாலைகளோடு தொடர்புபட்டவர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 1997 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 4320 பேர் புற்று நோயினால் பாதிப்படைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் கூடுதலான அளவில் காணப்படும் புற்று நோய்க்குச் சிகிச்சை வழங்க இங்கு போதியளவான வசதிகளில்லை. இந்நோய்த் தாக்கம் கண்ட அனைவருக்கும் மகரகமவிலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதற்கான முழுப்பொறுப்பினையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்றுச் செயற்படுத்தி வந்துள்ளது. தற்போது நாட்டின் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்துள்ள வேளையில் அந்நிறுவனம் தனது பணியினை இடைநிறுத்தியுள்ளது. இதனால், இந்நோய்க்கான சிகிச்சைக்குச் செல்பவர்கள் பெரிதும் இடையூறுகளைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே - சகலவசதிகளும் கொண்டதான புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டிய கட்டாய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதற்குப் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்படும்போது, நிலவறை வசதிகொண்டதாகவும், கடற்சூழல் கொண்டதாகவும் அமையவேண்டும் என்றும் நேற்றைய தினம் யாழ். கோயில் வீதியில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேராசிரியர் குணாளன் தெரிவித்தார். இம்மாநாட்டில் டாக்டர் தியாகராஜாவும் கலந்துகொண்டார். (சு)

# இருள் சூழ்ந்திருந்த ஈழத்தின் அரசியல் வானில் இள ஞாயிறாகத் தோன்றிய தந்தை செல்வா!



அரசியல் வானில் இளஞாயிறு எனத் தோன்றியவர் தந்தை செல்வநாயகம், "மெல்ல மெல்லப் பணிபுரியும் மேதை செல்வநாயகம் சொல்லுகின்ற பாதையிலே செல்லுகின்ற வீரர்நாம்" என்று ஈழத்துப் பெண் கவிஞர் ஒருவர் வியந்து பாராட்டுகின்ற அளவிற்கு, ஈழத்தமிழ் மக்க

## இன்று தந்தை செல்வாவின் 105 ஆவது பிறந்ததினமாகும்

ளையெல்லாம் முழுமையாக ஆட்கொண்டு வழிநடத்திச் சென்றவர் அவர்.

விடுதலை தவறி, பாழ்பட்டுக் கிடந்த தமிழ் மக்களையெல்லாம் ஒற்றுமைப்படுத்தி, 'ஒளிபொருந்திய வாழ்வு நமக்குண்டு, தன்னம்பிக்கையுடன் வாழ், தன்மானத்துடன் வாழ்' என்று புதுவழிகாட்டிப் புத்துணர்வு ஊட்டிய பெருமை அவரையே சாரும். வரலாறு தருகின்ற தீர்ப்பும் இதுவேயாகும். திசை தெரியாது தத்தளித்த தமிழ்மக்களுக்குக் கலங்கரை விளக்கமாகவும், அரசியல் அநாதைகளாக்கப்பட்ட மக்களை அரவணைத்த தாயாகவும் விளங்கியவர் அவர்.

அவருடைய 105 ஆவது பிறந்த ஆண்டு இவ்வாண்டாகும்.

வெள்ளையர் வெளியேற - அந்த இடத்தில் சிங்களர் ஆதிக்கம் தலைதூக்கியதே இலங்கை வரலாற்றில் நாம் கண்ட கசப்பான உண்மையாகும். இந்தச் சிங்கள வல்லாண்மையை உலகம் வியக்கின்ற முறையில் தன் ஆங்கில சொல்லாட்சி கொண்டு எதிர்த்து ஓங்கிக்குரல் எழுப்பியவர் ஜி.ஜி.பொன்னம்பலம். அவர் ஒருபுறமிருக்க - மக்களுக்கான சேவையில் வழிகாட்டியாகத் தன்னை முற்றாக அர்ப்பணித்து, தொலைநோக்குச் சிந்தனையுடன் பணியாற்றிய பெருந்தகை தான் தந்தை செல்வா.

நம்பிய தமிழினம் நடுக்கடலில் தத்தளிக்க விடப்பட்டபோது, ஏற்ற தலைவன் ஒருவன் இல்லையே என்று தடுமாறியபோது, அவர்களின் 'நம்பிக்கை நட்சத்திரமாக' ஒரு தலைவன் தோன்றினான். அத்தலைவனின் முழுப்பெயர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம்.

யாழ்ப்பாணத்து தூய யோவான் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்று இளம் அறிவியல் (பி.எஸ்.சி) பட்டம் பெற்று, சிலகாலம் கொழும்பு தூய தோமஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று - பெயர் பெற்ற வழக்கறிஞராக விளங்கினார். 1898 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி தோன்றிய இப்பெருமகன் - 1977 ஏப்ரல் 26 ஆம் நாள் உயிர் துறந்தார். மறையும்போது அகவை 79 ஆகும்.

இவர் தலைமையில் ஈழத்து மக்கள் வீரதீரச் செயல்களில் ஈடுபட்ட போதும் - தம் எல்லைப்பரப்பும், எண்ணிக்கையும் குறைந்தநிலையில், தமிழகத்தின் அரவணைப்பையே அவர்கள் நாடிநின்றனர். எனவேதான், 1956 இல் தொடங்கி இதுநாள்வரையில் ஈழத்தமிழ் தலைவர்கள் தமிழகத் தலைவர்களின் துணையை நாடி, தம் பணியை ஆற்றினர். 1958 இல் வன்னியசிங்கம் தமிழகத்திற்கு வருகை தந்து, தமிழகத் தலைவர்களோடு தொடர்பு கொண்டார்.

அதேபோல், 1972 இல் தந்தை செல்வா தலைமையில் ஒரு குழு வந்து - பெரியார், காமராஜர், கலைஞர் உட்பட பல தலைவர்களைச் சந்தித்து ஆற்றிய பணி இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

அவ்வாண்டு தொடங்கி தந்தை செல்வாவுக்கும், கலைஞருக்கும் இடையில் பிரிக்கமுடியாத பிணைப்பு நிலவியது. தம் உள்ளுணர்வுகளை எடுத்துரைக்கும் கருத்துக்களைத் தாங்கிய கடிதங்களும் இருவரிடையே பரிமாறப்பட்டன.

1977 இல் தந்தை செல்வா உடல் நலிந்தநிலையில் நல்ல முறையில் நடக்கமுடியாதநிலை ஏற்பட்டது. தம் தெல்லிப்பளை இல்லத்தில் தடுமாறி விழுந்தபோது, அவர் தலையில் காயமுற்று யாழ்ப்பாணம் மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டார்.

தனது 79 ஆவது அகவையில் முதுமையுற்றநிலையில் தந்தை செல்வா உயிர்துறந்தது உண்மை. ஆனால், தனது இறுதி மூச்சுவரை, கொள்கைப்பிடிப்பில் எவ்வித தளர்ச்சியையோ, ஊசலாட்டத்தையோ காட்டாது உறுதியோடு விளங்கினார். உலகில் பெருமக்கள் பலர் தம் இறுதிக் காலத்தில் தம் கொள்கையில் தள்ளாடி தடம்புரண்டதுண்டு. ஆனால், நம் தந்தை செல்வாவின் வியத்தகு இந்த உறுதிப்பாட்டினைத் தமிழீழத்தின் பிரிக்க முடியாத அங்கமாக விளங்கும் மட்டக்களப்புக் கவிஞர் "அக்கரை சக்தி" பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

*"நடுநடுங்கும் கைகால்கள் நடுங்காக்*
*– கொள்கை*
*நாவெடுத்துப் பேசமுடியா விட்டாலும்*
*சிடுசிடுப்பு இல்லாது சீராய் நேராய்ச்*
*செந்தமிழர் வாழ்விற்கே சேர்ந்த*
*– சொற்கள்*
*அடுத்தடுத்து வருவதனை அழகு ஈழம்*
*ஆர்வத்தோடெதிர்பார்த்து அதனைக்*
*– கேட்டும்*
*நடுநிலைமை தவறாத நல்ல நோக்கு*
*நம் தமிழர் மூதறிஞர் செல்வா நாக்கு*
*பஞ்சடைத்த இரு கண்கள் ஆனால்*
*– அந்தப்*
*பார்வைதான் தமிழ் மகனைப் பல*
*– வானாக்கும்*
*வெஞ்சிறையுள் புகுதற்கும் விறலை*
*– ஈனும்*
*வேகத்தை தீவிரத்தை மேலும் கூட்டும்*
*அஞ்சாமை மந்திரத்தை அகத்தில்*
*– ஓதும்*
*ஆயிரமாய்த் தியாகிகள் ஆக்கப்*
*– போகும்*
*நஞ்சுகளை அமுதாக்கி நமக்கு நல்கும்*
*நாற்பது லட்சம் தமிழர் நாட்டை*
*– மீட்டும்"*

இது வெறும் கற்பனையல்ல. மாறாக என்றும் பொருள்பொதிந்த பாடலாகவுள்ளது.

சாதி வெறியைச் சாடிய இச்சான்றோன் - யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், மலையகத்தமிழன் என்று மாறுபட்டு, வேறுபட்டுக் கிடந்த தமிழனை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த ஒப்பற்ற தலைவனாக விளங்கினார். மாறுபடும் மதங்களையும் அவர் இணைத்ததின் விளைவு "இஸ்லாம் எங்கள் நெறி, இன்பத்தமிழ் எங்கள் மொழி" என்று இஸ்லாமிய தமிழர்களும் அவரது தலைமையையேற்று மகிழ்ந்தனர். குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்களுக்காக இவர் ஓங்கிக் குரல் கொடுத்ததன் விளைவு, "எம்மைக்காக்கும் தெய்வம்" என்று இந்திய மரபு - மலையகத்தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் சிவநெறி தழுவியநிலையிலும், கிறிஸ்தவராக விளங்கிய இவரைத் தலைவராக ஏற்றனர். ஈழத் தமிழினம் - மதம் கடந்தநிலையில் மொழி வழியால் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளதை உலகிற்கு இது எடுத்துக்காட்டியது.

ஓர் இனம் - மொழியுரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் இழந்தாலும், மீண்டும் வாழ்வுபெறுவதற்கும் வாய்ப்புண்டு. ஆனால், தம் தாயகத்தை, வாழ்வகத்தை, பாரம்பரியப் பிரதேசத்தைப் பறிகொடுக்குமாயின் அந்த இனத்திற்கு எதிர் காலமே இல்லை. ஓர் இனம் தன்னைத்தானே உணர்த்துவதற்கு மட்டுமல்ல, தன் உயிர்ப் பாதுகாப்பிற்கும், நிலப்பாதுகாப்புத் தேவை என்பதனை உள்ளத்தின் அடித்தளத்தினின்று உணர்த்தியவர் தந்தை செல்வா.

இவரின் சிந்தனையை முழுமையாக ஏற்றுச் சிந்தித்துச் செயலாற்றிய 3 தமிழ் தலைவர்களை இங்கு நாம் நினைவுகொள்ளல் நலம். ஒருவர்- வாழ்வகத்தைக் காத்து, வண்டமிழை வாழ்வித்த வன்னியசிங்கம். மற்றையவர் - "பொல்லா விலங்குகளுக்கும், கீழ்ப் பறவைகளுக்கும் இருக்கின்ற பாதுகாப்புக்கூட ஈழத் தமிழனுக்கு இல்லை" என்று கண்ணீர்விட்ட டாக்டர் நாகநாதன். "சுதந்திரத்திற்காக மட்டும் நாம் சுதந்திரம் கேட்கவில்லை, எம் தமிழ் மண்ணில் விளைந்த சோற்றைப் பிறர் பறிக்காது உண்பதற்கும், எமக்குச் சுதந்திரம் வேண்டும்" என்று குரலெழுப்பிய சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை- இன்னொருவர்.



தந்தை செல்வாவோடு அடிக்கடி பயணஞ்செய்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுண்டு. குறிப்பாக, திருகோணமலை மாவட்டக் குக் கிராமங்களுக்கெல்லாம் சென்று பார்வையிட்டபோது, "மூன்று போக விளைச்சல் உள்ள இந்தப் பூமியை நாம் இழப்பதா" என்று உணர்ச்சி வயப்பட்டுக் கேட்டார்.

"தமிழ்மண் காப்போம், தாயகம் மீட்போம், அங்குலமும் அயல் வெறியர் ஆளவிட மாட்டோம்" என்பதுவே அவரது தாரகமந்திரமாக விளங்கியது.

இணைப்பாட்சிக்காக 25 ஆண்டுகள் ஓங்கிக் குரலெழுப்பிய தந்தை செல்வா, ஆட்சிபீடத்தில் அமர்ந்த ஒவ்வொரு சிங்கள அரசினாலும் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டார். கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் - மை காய்வதற்கு முன்பே கிழித்தெறியப்பட்டன. இந்நிலையில் இனிமேல் ஈழத்தமிழன் தப்பிப் பிழைக்க வேண்டுமெனில், அவன் தனக்கொரு தனியாட்சியை உருவாக்கியே தீரவேண்டும் என்பதும் அவருடைய தீர்க்கமான முடிவாக விளங்கியது. அவருடைய சொற்களிலே கூறின் - "தமிழீழத்தை அடைவது என்பது வில்லங்கமான காரியம்தான். எந்தச் சிங்கள அரசும் தமிழீழத்தை வெள்ளித்தட்டில்வைத்து எமக்குத் தரப்போவதில்லை".

எனவேதான், தனது இறுதி ஆணையாக - தாம் மறைவதற்கு முன் 19.11.76 இல் இலங்கை நாடாளுமன்றத்தில் தனது மாற்றமுடியாத - முடிந்த முடிவைப் பின்வரும் சொற்களில் மொழிந்தார். "தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் ஒரு காலகட்டத்தில் இணைப்பாட்சி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால், கூட்டரசு மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியப்படாது. கடந்தகால அனுபவங்கள் மூலம் இப்போது இதை அறிந்து கொண்டு விட்டோம். இந்த அனுபவங்கள் அடிப்படையில், நாங்கள் தனியாகப் பிரிந்து வாழ வேண்டியதுதான் என்ற முடிவிற்கு வந்து விட்டோம். இதை நாம் செய்யாது விட்டால், தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒருபோதும் மீட்டுக் கொள்ள முடியாது. எங்கள் இயக்கம், நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை. இழந்த எங்கள் உரிமையான அரசை மீளமைக்க வேண்டுமென்பதே எங்கள் நிலையாகும். நாங்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை அடியோடு கைவிட்டுவிட்டோம். எங்கள் தனிநாட்டுக்கான இயக்கம் அஹிம்சை அடிப்படையிலேயே நடைபெறும்.

அறவழியில் தமிழீழத்தை அடைய தந்தை செல்வா முயன்றார். இதனைச் சிங்கள இனம் மறுத்தது. காலச்சூழ்நிலைக்கு ஏற்ப, கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள் மாற்றத்திற்கு உள்ளாயின, இன்று வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையில் - மறவழியில் தமிழீழம் மலரப் போவது உறுதி. இது காலத்தின் கட்டாயம். வரலாறு தரப்போகின்ற தீர்ப்பும் இதுவாகவே விளங்கும். தமிழீழத்தை அடைவதே தந்தை செல்வாவிற்கு நாம் செய்கின்ற தலையாய கைமாறாகும். ☆

**மா. க. ஈழவேந்தன்**

---

# நாகர்கோயில் பகுதியில் மண் அகழ்வதற்கு அனுமதிக்குமாறு படையினரிடம் கோரிக்கை

நாகர்கோயில் இராணுவப் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பிரதேசத்தினுள் - மண் ஏற்றுவதற்கு அனுமதிக்குமாறு, வடமராட்சி கிழக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம்- படையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பன் முதல் நான்காம் முனைப் பிள்ளையார் கோயில் வரையான கரையோரப் பகுதியிலுள்ள மண்ணை ஏற்றுவதற்கே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் குடத்தனை, மணற்காட்டுப் பகுதிகளில் பெருமளவிலான மண் ஏற்றப்பட்டுள்ளதை அடுத்து, அப்பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்ட மண்ணியல் நிபுணர்கள்- மண் ஏற்றுவதால் இந்தப் பகுதியில் ஏற்படும் சூழல் மாற்றத்தினைக்கருத்திற்கொண்டு இடை நிறுத்துமாறு கோரியிருந்தனர். இதனையடுத்து நாகர்கோயில் இராணுவமுகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் பெருமளவிலான மண் இருப்பதனால் அவற்றினை ஏற்றுவதற்குப் படைத்தரப்பினிடம் அனுமதி கோரியுள்ளனர்.

நாகர்கோயல் படைமுகாம் பொறுப்பதிகாரியைச் சந்தித்த சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கத்தினர் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக இராணுவ உயர்மட்டத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து பரிசீலிப்பதாகப் படையதிகாரி - சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர்

# நிவாரணத்துக்கான பொருட்கள் சஜிந்த கப்பலில் வருகின்றன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுக்குத் தேவையான நிவாரணப் பொருட்களுடன் சஜிந்த கப்பல் இன்று பருத்தித்துறை இறங்குதுறைக்கு வரவுள்ளது.

இந்தக் கப்பலில் ஆயிரத்து 800 மெற்றிக்தொன் அரிசி, சீனி என்பன எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று மேற்படி கப்பல் வந்தடைந்ததும், உடனடியாக பொருட்கள் இறக்கப்பட்டு, நிவாரண விநியோகம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி துன்னாலையில் அதிகரிப்பு

(துன்னாலை)

துன்னாலை கிழக்கு - குடவத்தைப் பகுதியில், சட்டவிரோதக கசிப்பு உற்பத்தி மீண்டும் அதிகரித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்து, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தண்டப்பணம் செலுத்தியோரும் மீண்டும் உற்பத்தியில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப் பகுதியில் இயங்கும் பல சரக்கு விறபனை நிலையங்களில், கசிப்பு உற்பத்திக்கான மூலப் பொருட்களும் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரியவருகிறது. (12)

# சமாதானம் வேண்டி மன்னாரில் யாத்திரை

விடுதலைப்புலிகளும் - அரசும் மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகள் வெற்றிபெறவேண்டி கடந்த வெள்ளிக்கிழமை பாதயாத்திரை ஒன்று மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்திலிருந்து ஆரம்பித்த இந்தப் பாதயாத்திரை, மன்னார் பரப்புக்கடந்தான் தேவாலயத்தைச் சென்றடைந்து, அங்கு பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் அங்கு உரையாற்றும்போது -

சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைந்து ஒரு நல்ல முடிவைப் பெற்றுத்தர நாங்கள் அனைவரும் பிரார்த்தனை செய்வோம் என்றார்.

இந்த நிகழ்வுகளில் 3000 இற்கும மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

உலகவலம்

## இஸ்ரேலில் தற்கொலை குண்டுத் தாக்குதல்

இஸ்ரேலில் உள்ள நேதான்யா நகரத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 20 பொதுமக்கள் காயமடைந்தனர்.

ஹோட்டல் ஒன்றின் அருகில் நெருக்கடி மிகுந்த வீதியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை யாரும் உரிமை கோரவில்லை.

தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரி இறந்துள்ளதுடன், காயமுற்ற மூன்றுபேர் ஆபத்தான நிலையிலுள்ளதாக இஸ்ரேலிய வானொலி அறிவித்துள்ளது.

# நாலாயிரம் தற்கொலைக் குண்டுதாரிகள் அமெரிக்கப் படைக்காகக் காத்திருப்பு

## ஈராக்கிய உயர் பாதுகாப்பு மாநாட்டின்பின் தகவல்

(பக்தாத்)

அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் மீதான புதிய, தொடர் தாக்குதல்களை நடாத்துவது பற்றி பக்தாத்தில் - ஜனாதிபதி சதாம் ஹுசைன் தலைமையில் உயர்மட்ட இராணுவ மாநாடொன்று நடைபெற்றது.

ஈராக்கிய உப ஜனாதிபதி ராஹா யாசின் ரமடான், துணைப் பிரதம மந்திரி தாரிக் அசீஸ், சதாம் ஹுசைனின் மகன் குசெய் உட்படப் பலரும் இம்மாநாட்டில் பங்குபற்றியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் அமெரிக்கச் சோதனைச் சாவடியில் தற்கொலைத் தாக்குதல் நடத்திய குண்டுதாரிக்கு கௌரவம் தெரிவித்து இந்த மாநாடு ஆரம்பமானது.

"அனைத்து அரபு நாடுகளிலிருந்தும் தற்கொலைத் தாக்குதல் நடாத்தக்கூடிய 4000 முஜாஹுதீன் போராளிகள் - ஈராக்கிய சகோதரர்களுடன் இணைந்து புனித யுத்தத்தில் போரிடுவதற்காக பக்தாத் வந்திருக்கின்றனர்" என அங்கு அறிவிக்கப்பட்டது.

இதேவேளை - இந்த மாநாட்டு முடிவில் பேசிய ஈராக்கியப் பாதுகாப்பு அமைச்சர் -

ஈராக் தனது தாக்குதல் திட்டத்திலிருந்து தளர்வெதுவும் காட்டப் போவதில்லை எனவும் -

ஈராக்கின் அநேகமான எதிர்ப்புத் தாக்குதலால் கோபமடைந்துள்ள அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் - மக்கள் கூடும் இடங்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல்களை நடாத்திவருவதாகவும் -

இதனால் மக்களிடையே விரக்தியும், ஈராக்கிய அரசுக்கு எதிரான உணர்வுகளுமே தலைதூக்கும் என அமெரிக்கா எதிர்பார்த்திருக்க - மாறாக, ஈராக்கிய மக்களிடையே அமெரிக்கா மீதான வன்மமே இன்னமும் அதிகரித்திருப்பதாகக் கூறினார்.


சதாம் சோரவில்லை

## ஈராக் போர்க்களம்


போரில் இறந்த பிரிட்டிஷ் கடற்படைச் சிப்பாயின் இறுதிஊர்வலம்


குண்டுவீச்சில் காயமுற்ற மகனை தூக்கிச் செல்லும் ஈராக்கியத் தந்தை.


காயமடைந்த ஈராக்கியரை அழைத்துச்செல்லும் அமெரிக்கப் படையினர்.


ஈராக்கியப் பொதுமகன் ஒருவரை சோதனைசெய்யும் அமெரிக்கச் சிப்பாய்.

# அமெரிக்க உயரதிகாரிகளிடையே பெரும் முரண்பாடுகள் வெடித்தன!

## போர் 'நகரமுடியாத நிலை'க்குள் சிக்கிவிட்டதாக விமர்சனம்


ஃபிராங் மற்றும் ரம்ஸ் ஃபீல்ட்

ஈராக்கியப் போரில் புதிய தந்திரோபாயத்தை பின்பற்றுமாறு அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் ஃபீல்ட் உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பெருமெடுப்பிலான படைநகர்வை இனித் தவிர்த்து, சிறிய சிறிய தாக்குதல் படையணிகளாக - சிறியரக ஆயுதங்களுடன் போரினைத் தொடருமாறு ரம்ஸ் ஃபீல்ட், அமெரிக்கப் படையதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

ஈராக்கியப் போரினை நடாத்திவரும் ஜெனரல் ரொமி ஃபிராங்ஸினது ஆலோசனையை மீறி அவர் இந்தப் புதிய பணிப்பை விடுத்திருப்பதாக 'நியூயோர்க்கர் மகஸீன்' இதழ் தெரிவித்தது.

எனினும், இந்த விடயம் பற்றி பென்ரகன் எந்தத் தகவலையும் வெளியிட மறுத்துவிட்டது.

இதேவேளை, ஈராக்கில் தமது படைகள் முன்னேறி வருவதாக வெள்ளை மாளிகை அறிக்கைகளை விட்டு வந்தபோதும், யுத்தம் தற்போது நகரமுடியாத ஒரு கட்டத்துக்குள்ளேயே (Stalemate Condition) சிக்கிவிட்டதாக அமெரிக்காவின் முன்னாள் புலனாய்வுத் துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதாக 'நியூயோர்க்கர் மகஸீன்' மேலும் தெரிவித்துள்ளது. டாங்கிகளை பாலைவனத்தூடாக நகர்த்துவதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாகவும், குரூஸ் ஏவுகணைகள் மற்றும் வழிகாட்டும் குண்டுகள் (Guided Bombs) ஆகியனவே போரை நடாத்துவதாகவும் அந்தச் சஞ்சிகை குறிப்பிடுகிறது.

இதேவேளை, ரம்ஸ் ஃபீல்ட்டுக்கும் போரை நடாத்தும் ஜெனரல் ரொமி ஃபிராங்ஸுக்கும் இடையிலான முறுகல், ஈராக் மீதான அமெரிக்காவின் போரை பெருமளவில் பாதிக்குமென அவதானிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

# தொடர்ந்து போர்க் களமாகும் பஸ்ரா; தீவிர ரோந்தில் பிரிட்டிஷ் படையினர்!

## கேணல் உட்பட 5 ஈராக்கியத் துருப்புக்கள் பலி



ஈராக்கில் மீண்டும் தீவிரமான போரில் ஈடுபட்டுவரும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள், நடாத்திய தாக்குதலில் - கேணல் தர அதிகாரி ஒருவர் உட்பட, ஐந்து ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாக - பிரிட்டனின் ரோயல் மரைன் கொமாண்டோக்கள் அறிவித்துள்ளனர்.

பஸ்ராவுக்கு வெளியேயுள்ள அபு - அல் - காசிப் கிராமத்திலேயே இத்தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கின்றது.

இதேவேளை - ரூமாலியா எண்ணெய்க் கிணறுகள் பற்றியெரிவது இன்னமும் தீர்ந்தபாடில்லை எனவும் - அங்கிருந்து எழும் புகைமூட்டம் வானளாவப் பரவியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறிருக்க - பஸ்ரா நகருக்குள்ளும் புறநகர்ப் பகுதிகளிலுமாக பிரிட்டிஷ் படைகள் தொடர்ச்சியான ரோந்தில் ஈடுபட்டுவருவதாகவும்,

ஆனாலும் - ஈராக்கியப் படையினர் சகலருமே பஸ்ராவைவிட்டு வெளியேறிவிட்டதாகக் கூறமுடியாது என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை- பஸ்ராவிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்து செல்லும் அமெரிக்க - பிரிட்டிஷ் படையினர் மீது - ஈராக்கிய நிலைகளிலிருந்து சினைப்பர் மற்றும் மோட்டார் தாக்குதல்களும் நடாத்தப்பட்டு வருகின்றன.



# இரவு பகலாக அதிர்கிறது ஈராக் தலைநகர் பக்தாத்




ஈராக்கின் தலைநகர் பக்தாத் மீது நடாத்தப்படும் தாக்குதல்களின் வேகம் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

இரவு பகலென்று இல்லாமல் குண்டுச் சத்தங்களால் பக்தாத் அதிர்ந்து கொண்டிருப்பதாகவும்-

கிழக்கு மற்றும் தெற்கு பக்தாத்தில் - அப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள ஈராக்கிய குடியரசுப் படையினரை வாபஸ்பெறச் செய்யும் இலக்குடன் - அமெரிக்க விமானங்களும், ஏவுகணைகளும் செக்கன் தவறாது தாக்குதலைத் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை - பக்தாத்திற்கு அருகே இரண்டு அமெரிக்கத் தாக்குதல் ஹெலிகளைத் தாம் சுட்டு வீழ்த்தியிருப்பதாக - ஈராக்கிய தகவல்துறை அமைச்சர் மொஹமட் சாயிட் அல்-சகாவ் தெரிவித்தார். ஆனால், இதனை பென்ரகன் மறுத்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்திற்கு புதிதாக செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

# வட-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பில் போட்டியிடவே விருப்பம்

## விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

(பண்டத்தரிப்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில், அகில இலங்கைத் தமிழ்க காங்கிரஸ் தனித்துப் போட்டியிடவும் தயாராக உள்ளது என, கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயக மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் நாம் கூட்டமைப்புடன் இணைந்தே போட்டியிட விரும்புகிறோம். எனினும் தனித்துப் போட்டியிடும் நிலைமை வருமாயின் நாம் அதனையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தனித்துப் போட்டியிடுவது நல்ல பயனைத் தரப்போவதில்லை. இதுபற்றி கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை- இதுபற்றி தமிழர் விடுதலைக்கூட்டணி விரைவில் கூடி ஆராயவிருப்பதாக அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (43)

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் மறியற் போர்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக சம்பளம் ஏதுமின்றி சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றிவரும் யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி மறியற் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் தீவகம், யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், தெல்லிப்பளை, வடமராட்சி, தென்மராட்சி உள்ளடங்கலாக அனைத்துப் பிரிவுகளிலும் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி, நாளை மறுதினம் காலை 7 மணிக்கு யாழ். மாகாண சுகாதார சேவையின் பிரதிப் பணிப்பாளர் பணிமனை முன்பாக மறியற்போராட்டம் நடத்தவுள்ளனர்.

இதேவேளை, குடாநாட்டிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார சேவைப் பிரிவுகளில் பெருமளவான சிற்றூழியர் வெற்றிடங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (சு,34)

# மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சியின் தனிப்பட்ட பாதுகாவலரைக் காணவில்லை

வன்னிப்பிராந்திய இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இன்னொரு சிப்பாயைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிறைவேற் பிறேம்லால் என்ற சிப்பாயே இரண்டு வாரங்களுக்கு முன்னர் காணாமற்போயுள்ளார். ஏற்கனவே கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம், நந்த மல்லவாராச்சியின் தனிப்பட்ட பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய ஒரு இராணுவச்சிப்பாய் நாவலவில் காணாமற் போயிருந்தார். இந்தத் தனியார் பாதுகாப்புச் சேவை மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சியின் மனைவியால் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலிஸ் விசாரணைகள் நடத்தப்பட்டு அறிக்கை இராணுவத்தளபதியிடம் கையளிக்கப்பட்டது. எனினும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இராணுவத்தில் பணியாற்றும் 13 சிப்பாய்களை, தனது மனைவியின் தனியார் பாதுகாப்புச்சேவையில் கடமையில் ஈடுபடுத்தியதாக, மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கணவனும் மனைவியும் வாள் வெட்டில் காயம்!

## கரவெட்டி-யாக்கருவில் நேற்றிரவு சம்பவம்

பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்ற கணவனும் மனைவியும் வாள்வெட்டுக்கு இலக்கானார்கள்.

நேற்று மாலை கரவெட்டி, யாக்கருப் பகுதியில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த என். கந்தசாமி (வயது 48), அவரது மனைவி கந்தசாமி சரோஜினிதேவி (வயது 47) ஆகிய இருவருமே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### விசா வழங்க...

இவர் மோசமாக நடந்து கொள்வதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இவருடன் பயண முகவரும் தொடர்புபட்டிருக்கலாம் எனவும் தூதரகப் பேச்சாளர் சந்தேகம் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள, பிரித்தானியாவிலிருந்து ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகளின்...

யிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் அச்சுறுத்தல் குறித்து தமது புலனாய்வுச் சேவைகளுக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. புலிகள் - அரசியல் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், படையதிகாரிகள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதாக வெளியான செய்திகளும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், எமது ஒன்றிய சிரேஷ்ட பொறியியலாளரும் ஆகிய
கலாநிதி A.S.சூசை அவர்களது
'சமுத்திரவியல்' எனும் நூல்
வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சிறந்த உயர்கல்வி நூலுக்கான
சாகித்திய விருதை
பெற்றுக்கொண்டமையையிட்டு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன், அவரது சேவை இம்மண்ணுக்கு மென்மேலும் தொடர இறைவனை வேண்டுகின்றோம்.
கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(296)

# பரீட்சை முடிவுகள் இவ்வாரம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப்பரீட்சை நிலையங்களாக உள்ள பாடசாலைகள், ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் மே 21 ஆம் திகதிவரை விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பாடசாலைகள், ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் மே 5 ஆம் திகதிவரை விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும்.

இதேவேளை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இவ்வாரம் வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# தந்தை செல்வாவின் பிறந்ததின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 105ஆவது பிறந்ததின நிகழ்வு, தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

### திருமலையில்...

ருந்தும் பல பேராளர்கள் திருகோணமலைக்கு வரவுள்ளனர்.

தென்பகுதிச் சிங்களப் பேராளர்களும் இதில் கலந்துகொள்வர். இம்மாதம் நடுப்பகுதியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு முன்னர் ஒத்தி வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

### கூட்டமைப்பில்...

கைகளால் அவர்கள் அத்தகைய நிலைப்பாட்டை எடுத்துள்ளார்கள். எம்முடனான இந்தியாவின் உறவு பாதிக்கப்பட்டிருக்கின்றமைக்கு, புலிகளின் நிலைப்பாட்டை நாம் நியாயப்படுத்துவதாக புதுடில்லி கருதியிருக்கலாம்.

தமிழர் விடுதலைக்கூட்டணி தனித்தே இயங்க விரும்புகின்றது. அது புலிகள் சொல்வதற்கு ஆமாம் சாமியாக தலையாட்டுவதிலிருந்து- சுயாதீனமாக இருப்பதற்கு வழிவகுக்கும்.

முன்பு வெளிநாட்டு இராஜதந்திரிகள் எம்முடன் பேசினார்கள். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. அவர்கள் எம்மைக் கடந்து கிளிநொச்சிக்கு விரைந்து சென்று புலிகளைச் சந்திக்கிறார்கள்.

இப்போதுள்ள நிலைமை குழம்பினால் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் யார் பேச முடியும்? என்றும் ஆனந்தசங்கரி அந்தப் பேட்டியில் கேள்வியெழுப்பியிருக்கின்றார்.

# தொலைக்காட்சி விவாதத்தை இடைநிறுத்திய இந்திய அதிகாரிகள்

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று மாலை இடம்பெறவிருந்த அரசியல் நிகழ்ச்சியொன்றை, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரின் வற்புறுத்தலினால் இந்தியத் தூதரக அதிகாரிகள் தலையிட்டு இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, தனியார் தொலைக்காட்சியொன்று முக்கிய அரசியல் விவகாரங்கள் தொடர்பான விவாத நிகழ்ச்சிகளை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒளிபரப்பி வருகின்றது.

நேற்றுமாலை 6 மணிக்கும் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாக இருந்தது. இந்த நிகழ்ச்சியில் ரெலோ முதல்வர் சிறிகாந்தா, தமிழ்க் காங்கிரஸ் சார்பில் குமரகுருபரன், ஈ.பி.ஆர். எல்.எப் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இந்த விவாதம் முன்கூட்டியே ஒளிப்பதிவு செய்யப்பட்டு அது தொடர்பாக விளம்பரங்கள் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கடுமையா கத்தாக் நடந்த விவாதமும் இடம்பெற்றிருந்தது.

இதை அவதானித்த குறித்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர், இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு நிலையை விளக்கியதாகவும், இந்திய தூதரக அதிகாரிகள் குறித்த தனியார் தொலைக் காட்சி நிலைய உ மையாளரான பெரும் வர்த்தகரைத் தொடர்புகொண்டு, குறித்த நிகழ்ச்சி ஒளிபரப்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகின்ற

இதையடுத்து மேற்படி அரசியல் விவாத நிகழ்ச்சியை தனியா தொலைக்காட்சி இடைநிறுத்தியது.

# விபத்தில் காயமுற்ற இளைஞ வைத்தியசாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டிப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் உழவு இயந்திரமும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இளைஞன் நான்கு தினங்களின்பின் மரணமடைந்தார். வல்வெட்டித்துறை, வன்னிச்சி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த தண்டபாணிக தேசிகர் பிரகாஷ் (வயது 16) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார்.

கடந்த செவ்வாய் அன்று உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியில் நடைபெற்ற இந்த விபத்தில் இவருடன் மேலும் ஒருவர் காயமடைந்த குறிப்பிடத்தக்கது.

இவரது சடலம் நேற்று மரண சாரணையின் பின் உறவினர்கள் ஒப்படைக்கப்பட்டது. (116,ச)

### ட்ரோலரை...

என, கண்காணிப்புக்குழுவின் உப லைவர் ஹொக்லண்ட் தெரிவித்தா

இதேவேளை மூழ்கடிக்கப்பட் ட்ரோலரின் முகவர், கடற்தொழி அமைச்சர் மகிந்த விஜேசேகரவி மனைவி என வெளியான தகவல் களை அமைச்சர் மறுத்துள்ளார்.

### தலைவரின்...

காலத்தில் வெற்றிகளைப் பெறமுடியும்.

இந்த விடுதலைப்போராட்டத்திற்காக, 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களையும், 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களையும் இழந்திருக்கின்றோம். நாங்கள் இன்று வாழ்க்கைக்கான போராட்டத்தினை நடத்தி வருகின்றோம். போராடாது வாழமுடியாது என்ற நிலையில் எமக்கு மேல் அடக்குமுறைகள் திணிக்கப்படுகின்றன. இன்றைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவது ஊடாக, நாங்கள் வெற்றிகளை அடைவோம்.

போரின் கொடுமைகள் எமக்குத்தான் தெரியும். எதிரியின் கோர எறிகணை வீச்சிற்கு மத்தியிலும் பல்வேறு துன்ப துயரங்களைச் சுமந்தவர்கள் நாங்கள். வெளியில் நின்று இந்தப் போராட்டத்தை விமர்சிப்பவர்களுக்கு இந்த நிலை புரியாது. போரை முதலில் வெறுக்க வேண்டியவர்கள் நாங்கள்தான். ஆனால், எம்மீது போர் திணிக்கப்படும் போது அதை எதிர் கொள்ளக் கூடியவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம். எங் போராளிகளின் தியாகங்களைத் உலகம் உன்னிப்பாக அவதானித் வருகிறது. அதிலும் பெண் போரா கள் புரியும் தியாகங்களால் எங்க மண் புதுமை கொள்கின்றது.

இந்த இடத்தில் அன்னை பூப அம்மா அவர்களை நினைத்து பார்க்கவேண்டும். எங்களுக்குப் பலம் சேர்ப்பதற்காக உண்ணாவிரதம் இருந்து தனது உயிரைக்கூட அர்ப் பணித்தார். ஆகவே, இந்த எழுச்சி மிகுந்த காலத்தில்தான் நாங்க வாழுகிறோம். இலக்கை அடையும் வரைநாம் எந்த வழியிலும் போரா டியே தீருவோம் என கேணல் கருணா மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.